விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 வைகாசி 23 சனிக்கிழமை (06.06.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 169

SATS-TECH ENGINEERS
T20
ICC WORLD TWENTY20 ENGLAND 09
Now available in dishtv & sundirect
New packages & Renewal
Call - 222 5908 / 222 8812

# வன்னி இறுதிக்கட்ட மோதலில் 5 ஆயிரம் பேர் வரை மட்டுமே பலி

## அரச கணக்கெடுப்பில் தகவல்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்துக்குமிடையில் வன்னியில் நடைபெற்ற இறுதிக்கட்ட மோதல்களில் 5 ஆயிரம் பேர் வரையான மக்களே கொல்லப்பட்டிருப்பதாக மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க தெரிவித்தார். இத் தகவல் தமது கணக்கெடுப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டதாக அவர் கூறினார். (12ஆம் பக்கம் பார்க்க)



கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட வணங்காமண் கப்பல்

## வங்கக் கடலில் காற்றழுத்தத் தாழ்வு

(சென்னை)

வங்கக் கடலின் வடமேற்கு பகுதியில் புதிய காற்றழுத்தத் தாழ்வுநிலை உருவாகியுள்ளது. இது மேலும் வலுவடைந்து புயலாக மாறக் கூடும் என சென்னை வானிலை மையம் எச்சரித்துள்ளது.

சில நாட்களாக பகலில் கடுமையான வெயில் அடித்தது. நேற்று முன்தினம் மாலை திடீரென குளிர்ந்த காற்று வீசியது. சமீபத்தில் வங்கக் கடலில் (12ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளூராட்சித் தேர்தல் காலத்திலேயே ஏ-9 பாதை மக்கள் பாவனைக்கு விடப்படும்!

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தல்கள் காலப்பகுதியிலேயே ஏ-9 பாதையை மக்கள் பாவனைக்கு திறப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

எனினும் 200 லொறிகளில் ஒவ்வொரு வாரமும் அரச நிவாரணப் பணிகளுக்கான பொருட்கள் மற்றும் தனியார் வர்த்தகர்களுக்கான பொருட்களை ஏ-9 பாதையூடாக எடுத்து வரும் நடைமுறை விரைவில் அறிமுகப்படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை (12ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல் குறித்து விசாரணை தேவை

## நவநீதம்பிள்ளையின் கோரிக்கையை அடியோடு நிராகரித்தது அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையில் அனைத்து தரப்பாலும் நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்த முழுமையான விசாரணை தேவை என்று ஐ.நா. மன்றத்தின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் நவநீதம்பிள்ளை விடுத்த கோரிக்கைக்கு இலங்கை அரசு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியாவும் ஆதரித்துள்ளது.

இலங்கை மோதல்களின் போது அனைத்து தரப்பாலும் நடத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் (12ஆம் பக்கம் பார்க்க)

## பசில் எம்.பி. தலைமையிலான குழு விரைவில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

(கொழும்பு)

யாழிலுள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களை பார்வையிடுவதற்கும் வடக்கின் வசந்தம் நிகழ்ச்சித் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்குமாக ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சர்கள் குழு விரைவில் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ்.வரும் அமைச்சர்கள் குழு தென்மராட்சி, கோப்பாயில் அமைந்துள்ள வன்னியிலிருந்து இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களை பார்வையிட்டு நிவாரணப் பணிகள் தொடர்பிலும் ஆராயவுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் வரவு செலவுத்திட்டத்தில் முன் மொழியப்பட்ட (12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை மீது விசாரணை நடத்துவதற்கு ஐ.நாவில் இந்தியா மீண்டும் எதிர்ப்பு

(ஜெனீவா)

இலங்கையின் தமிழர் பகுதிகளில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான ஆணையாளர் நவநீதம்பிள்ளை மீண்டும் வலியுறுத்தியிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள இந்தியா, இந்த விவகாரத்தில் இலங்கை அரசாங்கத்தை பாதுகாக்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 11ஆவது கூட்டத்தொடர் கடந்த 2ஆம் திகதி தொடங்கி எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உரையாற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் விவகாரங்களுக்கான ஆணையாளர் நவநீம்பிள்ளை இலங்கையின் தமிழர் பகுதிகளில் இடம்பெற்ற மனித (02ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் மனைவி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மனைவி சிராந்தி ராஜபக்ஷ தனது மகன் நாமல் ராஜபக்ஷ சகிதம் குடாநாட்டிற்கான திடீர் விஜயம் ஒன்றை நேற்றுக் காலை மேற்கொண்டிருந்தார்.

உயர் பாதுகாப்புப் பகுதியில் அமைந்திருக்கும் மாதகல் சம்பில்துறைப் பகுதியில் அமைந்திருக்கும் பகுதிக்கு இவர்கள் விஜயம் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மாதகல் (12ஆம் பக்கம் பார்க்க)

## நலன்புரி முகாம் மக்களில் எவரேனும் உயிரிழந்தால் ஐ.நாவே பொறுப்பு

### அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

முகாம்களில் தங்கியிருக்கும் பொதுமக்களில் எவரேனும் உணவின்றி உயிரிழந்தால் அதற்கான பொறுப்பை ஐக்கிய நாடுகளே ஏற்றுக்கொள்ள வேண்டும் என இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அண்மையில் நடைபெற்று முடிந்த இலங்கை தொடர்பான விசேட அமர்வின் போது (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் சரணடைவது குறித்து அரசுடன் நம்பியார் பேசினார்

### ஐ.நா. பேச்சாளர் தகவல்

(நியூயோர்க்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் பா.நடேசன், சமாதான செயலகப் பணிப்பாளர் சீ.புலித்தேவன் உள்ளிட்டோர் சரணடைவது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் தலைமைச் செயலரான விஜய் நம்பியார் இலங்கையில் இருந்தபோது அரசுடன் பேச்சு நடத்தியிருக்கிறார்.

இத்தகவலை (02ஆம் பக்கம் பார்க்க)

## விழிப்புணர்வு கருத்தரங்கு

மகளிர் அபிவிருத்தி நிலையம் தொடர்ச்சியாக நடத்திவரும் பெண்கள் எதிர்கொள்ளும் வீட்டு வன்முறை தொடர்பாக விழிப்புணர்வும் அதற்கான ஆலோசனைகளும் என்ற ஒரு நாள் கருத்தரங்கு இன்று சனிக்கிழமை கோட்டை மீனாட்சி மாதர்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் மகளிர் அபிவிருத்தி நிலையப் பணிப்பாளர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், யாழ்.பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வி உதயணி நவரட்ணம், நிலையத்தின் சட்ட உதவியாளர் திருமதி நகுலேஸ்வரி இராமச்சந்திரன், திட்ட உதவியாளர் செல்வி லஜிதா அமலசிங்கம், சமூக ஒருங்கிணைப்பாளர் திருமதி சர்மிளா சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டு பெண்கள் வன்முறை தொடர்பான கருத்துரைகளையும் ஆய்வுகளையும் வழங்கவுள்ளனர். (எ)

## போட்டிப் பரீட்சை

இலங்கை உயர் தொழில் நுட்ப கல்வி நிறுவனத்துக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ச)

## வருடாந்த விளையாட்டு விழா

வடமராட்சி மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் இருபது-20 மென்பந்தாட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் இன்று சனிக் கிழமை காலை 8 மணிக்கு கழக மைதானத்தில் கழக தலைவர் சி.செல்வதீபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் தலைவர் டி.எம்.வேலாகரன் கலந்து கொள்வதுடன் முதற்போட்டியில் கரவெட்டி மகேஷன் வி.க. எதிர் வல்வெட்டி ஒத்திகை வி.கழகமும், திருநாவலூர் வி.க. எதிர் தொண்டைமானாறு ஒத்திகை வி.கழகமும் மோதவுள்ளன.

அத்துடன் பிற்பகல் 3 மணிக்கு அல்வாய் சுப்பர் சீன் வி.க. எதிர் பாரதி வி.கழகமும் மோதவுள்ளன. (ச-10)

# வட மாகாண விளையாட்டுப் போட்டிகள் யூன் 20 ஆம் திக்தி மன்னாரில் ஆரம்பம்

## பயண ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மாகாணமட்ட பெரு விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை மன்னார் மாவட்டத்திலும் மெய்வல்லுநர் விளையாட்டுக்கள் யூலை மாதம் 2,3 மற்றும் 4ஆம் திகதிகளில் வவுனியா மாவட்டத்திலும் நடைபெறவுள்ளதாக வட மாகாண கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார்.

நிகழ்ச்சி நிரலுக்கு அமைய மாகாணமட்ட போட்டிகளுக்கு கலந்து கொள்ளவுள்ள அணிகளின் பாடசாலை அதிபர்களுக்கு உரியமுறையில் அறிவுறுத்தல்களை வழங்கி போட்டிகளில் உரிய நேரத்தில் பங்கேற்க நடவடிக்கை எடுக்குமாறு வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அவர் அறிவித்துள்ளார்.

நாட்டின் சூழ்நிலைகளால் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப நிகழ்ச்சி நிரலில் மாற்றங்கள் ஏற்படின் உடனடியாக அறிவிக்கப்படும் எனவும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்.மாவட்டத்தில் இருந்து கலந்து கொள்ளும் மாணவர்கள் போட்டிகளில் கலந்து கொள்வதற்கான பயண ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

அமைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின் படி விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் திகதிகள் வருமாறு;

ஜுன் 20- கபடி(ஆண்கள், பெண்கள்), ஜுன் 21எல்லே(ஆண்கள், பெண்கள்), ஜுன் 22- உடற்கல்விப் போட்டிகள், ஜுன் 23- மென்பந்து துடுப்பாட்டம்(ஆண்கள்), ஜுன் 24- கால்பந்து (ஆண்கள்), வலைபந்து (பெண்கள்),ஜுன் 25,26 -கூடைப் பந்து (ஆண்கள், பெண்கள்), ஜுன் 27- கரபந்து (ஆண்கள், பெண்கள்), ஜுன் 28,29- பட்மின்ரன். (ஆண்கள், பெண்கள்), கரம் (ஆண்கள், பெண்கள்), சதுரங்கம் (ஆண்கள், பெண்கள்),மேசைப் பந்தாட்டம் ( ஆண்கள், பெண்கள்); ஜுலை 2,3 மற்றும் 4 - மெய்வல்லுநர் விளையாட்டுக்கள். (ச)

## ஞாபகார்த்த விழா

(யாழ்ப்பாணம்)

தோழர் வே.கந்தசாமியின் 62-வது ஞாபகார்த்த விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மூளாய் வீதியிலுள்ள ஸ்ரீ கணேச வாசிகசாலை மண்டபத்தில் தலைவர் க.கி. தவராசா தலைமையில் நடைபெறும். (ச)

## நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் பிறப்பு ,இறப்பு தொடர்பான நடமாடும் சேவை எதிர்வரும் 10 ஆம் திகதி புதன் கிழமை காலை 9 மணி முதல் 12 மணி வரை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. பொது மக்கள் பொருத்தமான ஆவணங்களுடன் வருகை தருமாறும் மேலதிக விபரங்களுக்கு தமது பிரிவுக் கிராம சேவையாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் ஆர். வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச)

## இலங்கை மீது விசாரணை...

உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பாக கடந்த 25, 26ஆம் திகதிகளில் நடைபெற்ற சிறப்புக் கூட்டம் வரவேற்கத்தக்கது என்றும் தெரிவித்திருந்தார்.

நவநீதம்பிள்ளையின் இந்தக் கருத்தை இந்தியத் தூதுவர் கோபிநாதன் ஆச்சம்குலங்காரே எதிர்த்ததுடன் அவர் அங்கு தனது கருத்தையும் முன்வைத்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை தொடர்பாக நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தை நவநீதம்பிள்ளை வரவேற்றிருக்கிறாரே தவிர அன்றைய நாள் இலங்கைக்கு ஆதரவாக எடுக்கப்பட்ட தீர்மானத்தை அவர் வரவேற்கவில்லை. இது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழு சபைக்கு உகந்தது அல்ல என்று அவர் தெரிவித்திருந்தார்.

இந்தக் கூட்டத்தொடரில் நேற்று நடை பெற்ற அமர்வில் செக்குடியரசு, பிரான்ஸ், பிரித்தானியா, ஜப்பான்,தென்கொரியா,மெக்சிக்கோ போன்ற நாடுகளும் இலங்கையின் தமிழர் பகுதிகளில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அனைத்துலக விசாரணை வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளன.

இலங்கையில் இடம்பெற்ற ஆயுதப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னமும் முறையாகக் கண்காணிக்கப்படவில்லை என்று இந்த நாடுகள் தெரிவித்துள்ளன. எனினும் இந்தியா தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாது இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றி விடும் முயற்சிகளிலேயே இந்த கூட்டத் தொடரில் காய் நகர்த்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக ஜப்பான், தென் கொரியா, மெக்சிக்கோ போன்ற நாடுகளே இலங்கை தொடர்பான அனைத்துலக விசாரணையை வலியுறுத்தத் தொடங்கியுள்ள நிலையில் இந்தியா தொடர்ந்தும் அதற்கு முட்டுக்கட்டை போட்டுவருவது மனித உரிமை ஆர்வலர்களுக்கு இடையே கடுமையான விசனத்தை ஏற் படுத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் நவநீதம்பிள்ளையின் இந்தக் கருத்தை அரசசார்பற்ற நிறுவனங்கள் பலவும் வரவேற்று உரையாற்றியிருந்தன. (ச-5)

## புலிகள் சரணடைவது...

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் பேச்சாளர் மிச்சேல் மொன்டாஸ் தெரிவித்துள்ளார்.

விஜய் நம்பியார் இலங்கைக்கு வருவதற்கு முன்பாக,சரணடைதல் தொடர்பான வேண்டு கோளுடன் பிரித்தானிய ஊடகவியலாளரான மேரி கொல்வின் அவரை முதலில் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார்.

அதனைத் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதி ஒருவரும் விஜய் நம்பியாரைத் தொடர்பு கொண்டிருக்கிறார்.

சரணடைவதாக இருந்தால் படையினரிடம் தான் சரணடைய வேண்டுமே தவிர மூன்றாவது தரப்பினரிடம் அல்ல என்பதை அரசு வலியுறுத்தி வருகிறது என்ற செய்தியை விஜய் நம்பியார் அவர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

சரணடைவதற்கு விரும்பிய நடேசனிட மும் புலித்தேவனிடமும் வெள்ளைக்கொடியை ஏந்தி படையினரிடம் காட்டினால் போதும், பாதுகாப்பாக சரணடையலாம் என்று விஜய் நம்பி யார் கூறியிருக்கிறார்.

நடேசன், புலித்தேவன் ஆகியோரின் கடைசி வேண்டுகோள் ஊடகவியலாளர் மேரி கொல்வின் மூலமாக விஜய் நம்பியாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது கொழும்பில் இருந்த தூதரக அதிகாரிகள், அரசியல்வாதிகள் உட்பட பலருக்கும் நேரடியாகத் தெரிவிக்கப்பட்டதாகத் தோன்றுகிறது.

இது அரசின் உயர் நிலையில் உள்ளவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டு, பதிலுக்கு உறுதி மொழிகள் அளிக்கப்பட்டதாகக் கருதுகிறோம் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரின் பேச்சாளர் மிச்சேல் மொன்டாஸ் கூறியுள்ளார்.

நடேசன் அல்லது புலித்தேவன் தொடர்பாக விஜய் நம்பியார் தன்னைத் தொடர்பு கொண்டு பேசியதாகக் கூறப்படுவதை வெளியுறவுத் துறைச் செயலாளர் பாலித கோஹன்ன மறுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் வேறு பல உயர் தலைவர்களின் உடல்களுடன் நடேசன், புலித்தேவன் ஆகியோரின் உடலங்கள் மோதல் பகுதியில் கர்ணப்பட்டதாக படையினர் மே 18 ஆம் திகதி அறிவித்தனர்.

இதற்கிடையே, ஊடகவியலாளர்கள் சிலருக்கு எதிராகவும் மோதல் பகுதியில் மருத்து வம் செய்துவந்த மருத்துவர்கள் சிலருக்கு எதிராகவும் குற்றச்சாட்டுக்களை சுமத்தி அரசு நடவடிக்கை எடுக்கவிருப்பதாக வெளியாகி வரும் செய்திகளை ஐ.நா. கவனித்து வருவதாக ஊடகவியலாளர்களின் கேள்விக்கு ஐக்கிய நாடுகள் சபையின் பேச்சாளர் மிச்சேல் மொன் டாஸ் பதிலளித்துள்ளார். (ச-5)




## உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் -2009
## யாழ்ப்பாணம் மாநகரசபை

இடம் பெயர்ந்த வாக்காளருக்கான வாக்களிப்பு வசதி உள்ளூர் அதிகார சபைகள் சட்ட இல. 30 பிரிவு 4(1) 2009 இன் கீழ் யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் வேறு கிராமங்களில் நலன்புரி நிலையங்களில் இடம்பெயர்ந்து வசிக்கும் வாக்காளர்கள் நடைபெறவிருக்கும் யாழ்ப்பாணம் மாநகர சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கான ஒழுங்குகள் தேர்தல்கள் ஆணையாளரால் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தலில் வாக்களிக்க விரும்பும் வாக்காளர்கள் தாங்கள் வசிக்கும் பிரதேசத்திலுள்ள பிரதேச செயலகத்தில் விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து பிரதேச செயலரிடம் /தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு யாழ் மாநகர சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதியான ஜுன் மாதம் 4 ஆம் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். 2008 ம் ஆண்டுக்கான யாழ்ப்பாண மாநகரசபைக்கான வாக்காளர் இடாப்புக்களை சகல பிரதேச செயலகங்கள் / உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் பார்வையிடலாம் என்பதனையும் அறியத் தருகிறேன்.

க.கணேஷ்,
தெரிவத்தாட்சி அலுவலர்,
தேர்தல் மாவட்டம் இல. 10 - யாழ்ப்பாணம். (C-2541)

## அறிவித்தல்

நாளை 07.06.2009 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக ஊடக வள நிலைய மண்டபத்தில் நடைபெறவிருந்த 'ஒரு கிராமத்தின் கண்ணீர் கதை' (சிறு கட்டுரை தொகுதி) நூல் வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது.

-யாழ். கலை இலக்கிய நண்பர்கள்
(C-2542)

## விற்பனையாகின்றன

க.பொ. த . உயர்தரம் - M.P. தவசிதன் பௌதிகவியல் ஒன்பது விதமான பயிற்சிப் புத்தகங்கள் விற்பனையாகின்றன.

ஏக விநியோகஸ்தர்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை,
234, கே.கே.எஸ். றோட்,
(C-2540) T.P.2573

## காணி விற்பனைக்கு

நக்கா வீதியில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
(பொஸ்கோ பாடசாலைக்கு அருகில்)
தொடர்பு :
தொ.பே:0212226875
(28)

# இன்று ஒரு தகவல்

## நீ... நீயாக இரு!

புகழ்பெற்ற ஜப்பானிய சாமுராய் வீரன் ஒருவன் இருந்தான். வாள் வீச்சில் மிகவும் கெட்டிக்காரன்.

போருக்குப் போய்விட்டு களைத்துப் போய் திரும்பி வந்தான். படுக்கையில் விழுந்தான். பக்கத்தில் ஏதோ சத்தம். என்னவென்று பார்த்தான்.

ஒரு எலி அவனை முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது. உடனே வாளை உருவி வீசினான். அது தப்பித்துக் கொண்டது. எவ்வளவோ முயற்சிகள் செய்தான். கடைசியில் வாள் முறிந்ததுதான் மிச்சம்.

அவனுக்குப் பயம், அவமானம். எவ்வளவோ போரை ஜெயித்திருக்கிறான். ஒரு எலியிடம் தோற்பதா? அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

மனைவியிடம் சொன்னான். அதற்கு அவள் சிரித்துக் கொண்டே "உங்களுக்குப் புத்தியே இல்லை. எலியைப் போய் யாராவது வாலால் வெட்டுவார்களா?" என்றாள்.

"நீ என்ன சொல்கிறாய்?" என்றான்.

"ஒரு பூனையைக் கொண்டு வாருங்கள்" என்றாள். உடனே ஒரு பூனைவந்து சேர்ந்தது. அது சாதாரண பூனையில்லை. வீரசாகசம் செய்து பழக்கப்பட்ட பூனை. பெரிய இடத்தில் வளர்ந்தது. அதைக் கொண்டு வந்து விட்டார்கள்.

அது குறிபார்த்து எலி மீது பாய்ந்தது. ஆனால் அந்த எலி தப்பிவிட்டது. மறுபடியும் பாய்வதற்கு முயற்சி செய்தது. ஆனால் அந்த எலி தந்திரமாக அந்த பூனையின் முகத்திற்கு நேராகப் பாய்ந்தது.

அவ்வளவு தான். அந்தப் பூனை பயந்து ஜன்னல் வழியாக ஓடிவிட்டது. அடுத்தாக ஒரு அரண்மனைப் பூனையை கொண்டுவந்து விட்டார்கள்.

அந்தப் பூனையாலும் எலியை ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த வீரன் அந்தப் பூனையிடம் புலம்பத் தொடங்கினான்.

"அரண்மனைப் பூனையே... நீயும் தோற்று விட்டாயே இனி நான் என்ன செய்ய முடியும்?" என்றான்.

"சாதாரண வீட்டுப் பூனையை அழைத்து வந்து பார்" என்று அது யோசனை சொல்லியது.

"சாதாரண பூனையால் என்ன செய்ய முடியும்?" என்றார்.

அதற்கு அந்த அரண்மனைப்பூனை, "பெரிய வீட்டுப் பூனையெல்லாம் நன்றாக சாப்பிட்டு தூங்கிப் பழக்கப்பட்டிருக்கும். அதற்கெல்லாம் ராஜதந்திரம் தெரியலாம். ஆனால் எலி பிடிக்கத் தெரியாது.

அதற்கான வளர்ப்பும் இல்லை. ஏனெனில் அதற்கெல்லாம் பசியில்லை. சாதாரண வீட்டுப் பூனை பசிக்கு ஆகாரம் தேடியலையும். எலியைப் பிடித்து சாப்பிட்டுத்தான் உயிர் வாழும். அதனால் அவற்றுக்கு எலி பிடிக்கும் உத்திகளும் தெரியும்" என்றது.

"அதுவும் பூனை தான்... நீயும் பூனை தான்... அதால் முடிகிறது. உன்னால் ஏன் முடியவில்லை?" என்று கேட்டான் இவன்.

இதே கேள்வியை நானும் அதனிடம் கேட்டேன். "இதில் என்ன தந்திரமுறை இருக்கிறது? நான் ஒரு பூனை அவ்வளவுதான் எனக்குத் தெரியும் என்றது அது" என்று விபரமாக கூறியது அரண்மனைப் பூனை.

உடனே ஒரு சாதாரண பூனையைக் கொண்டு வந்து விட்டார்கள்.

ஒரு நிமிடத்தில் அந்த எலியைக் கௌவிக் கொண்டு வெளியே வந்தது அந்தப் பூனை.

எல்லோரும் மெதுவாக அதற்கருகில் நெருங்கி "உன்னுடைய கலைத்திறமை என்ன?" என்று கேட்டார்கள்

அதற்கு அந்த சாதாரண பூனை "அதெல்லாம் எனக்குத் தெரியாது. நான் பூனை அவ்வளவுதான். நீங்களும் பூனையாக இருங்கள்" என்று செல்லிக் கொண்டு போய் விட்டது.

இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டிய தத்துவம் என்ன?

அவரவர்கள் தங்களுடைய இயல்பை உணரும் போது தான் உண்மை புரியும். அவரவர் தங்கள் இயல்பை கண்டு பிடித்து அதில் இருப்பதுதான் உண்மையான கலை. நீ... நீயாக இரு... என்பதுதான் இந்தத் தத்துவம்.

ஒரு பெரிய மனிதன் வாயை அகலமாக திறந்து கொண்டு தூங்கியிருக்கிறான். உடனே ஒரு எலி உள்ளே புகுந்து விட்டது.

உடனே வீட்டு வேலையாள் டாக்டருக்கு போன் பண்ணினான். அதற்கு டாக்டர், "நான் உடனே புறப்பட்டு வருகிறேன். அதற்கு முன் நீ ஒரு ரொட்டித்துண்டை அவர் வாய்க்கு நேராக காட்டு. உள்ளே போன எலி வெளியே வந்து விடும்" என்றார்.

"சரி" என்றான்.

சிறிது நேரத்தில் டாக்டர் அங்கே போய்ச் சேரும் போது அந்த வேலையான் ஒரு பெரிய மீனை அவரது வாய்க்கு நேராக காட்டிக் கொண்டிருந்தான்.

"நான் ரொட்டித் துண்டைத்தானே காட்டச் சொன்னேன்" என்றார் டாக்டர்.

"எலி வெளியில் வர ரொட்டித் துண்டைக் காட்டச் சொன்னீர்கள். அதன் பின்னர் அந்த எலியைத் துரத்திக் கொண்டு ஒரு பூனை உள்ளே சென்று விட்டது. அதற்காகத்தான் இந்த மீனைக் காட்டிக் கொண்டிருக்கிறேன்" என்றான் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# முதலாம்தர மாணவர் அனுமதிக்கான விண்ணப்பத்தில் கிராம சேவகரின் உறுதிப்படுத்தல் அவசியமில்லை


## கல்வியமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டு முதலாம் தரத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்குரிய விண்ணப்பப்படிவத்தில் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை கிராமசேவகர் உறுதிப்படுத்துவது அவசியமில்லை என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக விண்ணப்பதாரியின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தமது இலக்கத்தைக் குறிப்பிடுவதோடு அதனைக் கிராம சேவகர் உறுதி செய்ய வேண்டும் என்றும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் கிராமசேவர்களின் கையொப்பத்தைப் பெறுவதில் சில அசௌகரியங்கள் ஏற்படுவதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

எனினும் குறிப்பிட்ட பகுதியில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் இலக்கத்தை விண்ணப்பதாரிகள் குறிப்பிட வேண்டும். 2008 ஆம் ஆண்டு வாக்காளராகப் பதிவு செய்த பின்னர் வாக்காளர் அட்டவணை தயாரிக்கப்படாதிருந்தால் வாக்காளராகப் பதிவு செய்த விண்ணப்பத்தின் இலக்கத்தையேனும் குறிப்பிட வேண்டும் என்றும் அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது. (6)



புலோலி ப.நோ.கூட்டுறவு சங்கத்தால் பருத்தித்துறை மந்திகை ஆதாரவைத்தியசாலைக்கு முன்பாக "சிறப்பு கூட்டுறவு நகர்" ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. பருத்தித்துறை பிரதேசசெயலர் இ. வரதீஸ்வரன் சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டி சிறப்பு கூட்டுறவு நகரைத் திறந்து வைப்பதையும் அருகில் சங்கத்தின் பொது முகாமையாளர் நிற்பதையும் ந. கணேசலிங்கம் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள் மருதங்கேணி நிருபர்)

# தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் தேசிய சான்றிதழ் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாணம், மானிப்பாய் போன்ற பயிற்சி நிலையங்களிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த.(சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமல் கணிதம், ஆங்கிலம் பாடங்களில் திறமைச் சித்தியுடன் கூடிய 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 4 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்களாக 6 பாடங்களில் சித்தி அல்லது ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம், ஆங்கிலம் உள்ளடங்களாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த.(உ/த) பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

தகுதி உடையவர்கள் முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை *மாவட்ட முகாமையாளர், NAITA இல 7, கோவில் வீதி, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு 20-06-2009 க்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (6)

## இராசி பலன்

*06.06.2009*
*(வைகாசி 23, சனிக்கிழமை)*
*சதுர்த்தசி முன்னிரவு 10.49 மணிவரை*
*விசாகம் முற்பகல் 09.51 மணிவரை*
*இராகுகாலம் 8.52-10.22 மணிவரை*
*சுபநேரம் 2.52-4.22 மணிவரை*
*திருக்கேதீச்சரநாதர் தேர்*

| | |
|---|---|
| மேடம் | மனச்சோர்வு, முயற்சி தாமதம், மரியாதைக்குறைவு, போசன சுகம். |
| இடபம் | காரிய அனுகூலம், அபூர்வ சந்திப்பு, செய்தொழில் விருத்தி, பொருள் சேர்க்கை. |
| மிதுனம் | நோய் குணமடைதல், பகைவர் நேசம், எடுத்த காரியம் கைகூடும், தன வரவு. |
| கடகம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, அஜீரணக் கோளாறு, சொத்துப் பிணக்கு. |
| சிங்கம் | அற்பர் உறவு, திடீர் நன்மை, பயந்த சுபாவம், தொழில் சிந்தை. |
| கன்னி | தடைப்பட்ட காரியம் கைகூடும், சகோதரர் உதவி, பிரயாண நன்மை, விருந்துபசாரம். |
| துலாம் | கௌரவக்குறைவு, முயற்சி தாமதம், தனவிரயம், வீண்பகை. |
| விருச்சிகம் | ஜனவசியம், நண்பர்கள் உதவி, தொழில் சிந்தை, பொருள் சேர்க்கை. |
| தனுசு | தந்தை வழி உறவு, காரிய தாமதம், சயனசுகக்குறைவு, சுபசெலவு. |
| மகரம் | கலந்துரையாடல், குடும்பசுகம் எடுத்த காரியம் கைகூடும், தன லாபம். |
| கும்பம் | தொழில் மேன்மை, சுபநிகழ்வு, காரிய நன்மை, உற்சாகம். |
| மீனம் | அச்சமான நிலை, திடீர் பயணம், முயற்சி தாமதம், கட்டுப்பாடு. |

**வள்வன்**

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 280 | 200 |
| உருளைக்கிழங்கு | 240 | 280 | 260 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 80 |
| தக்காளி | 600 | -- | -- |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 80 | 100 |
| கோவா | 100 | 110 | 120 |
| கரட் | 100 | 120 | 120 |
| பூசணி | 20 | 40 | 20-60 |
| புடோல் | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 60 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 35 | 50 | 50-60 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | -- |
| பாகற்காய் | 100 | 130 | 100 |
| வெண்டிக்காய் | 110 | 135 | 120 |
| கரணைக் கிழங்கு | 100 | 120 | 80 |
| பயிற்றங்காய் | 110 | 140 | 140 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | -- | -- | -- |
| கறிமிளகாய் | -- | -- | 120 |
| முருங்கைக்காய் | -- | -- | 500 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 10 |
| தேசிக்காய் | 120 | 140 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 35-40 | 35-50 |

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

எவர்சைன் கிட்ஸ் வேல்ட் பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் எவர்சைன் கல்வி நிலைய இயக்குநர் எஸ்.ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீட பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் செல்வி. மலர் சின்னையா, நல்லூர் பிரதேசசபை செயலாளர் எம்.சாந்தசீலன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

## கலந்துரையாடல் பிற்போடப்பட்டுள்ளது

(சாவகச்சேரி)

அமெரிக்கன் இலங்கை மிஷன் யாழ். பிராந்திய சமயக் கல்விக் குழுவினால் நடத்தப் படவிருந்த ஞாயிறு பாடசாலை ஆசிரியர் களுக்கான கலந்துரையாடல் காலவரை யறையின்றி பிற்போடப்பட்டுள்ளது. இக் கலந் துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற இருந்தமை குறிப்பிடத் தக்கது. (6-4-29)




# நல்லூர் பிரதேச செயலக பிரிவைச் சேர்ந்த உயர்பாதுகாப்பு வலயத்தை சொந்த இடமாகக் கொண்ட

## மக்களின் பதிவுகளை மேற்கொள்ளல்

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட தற்போது உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடங்கிய அரியாலையைச் சேர்ந்த அரி யாலை தென்கிழக்கு (J/89) கிராம அலுவலர் பிரிவைச்சேர்ந்த மணியம் தோட்டம், உதயபுரம் கிராமங்கள், அரியாலை கிழக்கு(J/90) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த நாவலடி, பூம்பு கார், அரியாலை கிழக்கு முணங்கு கிராமங்கள், அரியாலை மத்தி தெற்கு (J/96) அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஈச்சங்காடு கிராமம், அரியா லை மத்தி வடக்கு(J/94) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த சிறு செம்மணி கிராமம் ஆகியவற்றை சொந்த இடமாகக் கொண்ட மக்கள் தங்களுடைய சொந்த இடத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் எதிர்வ ரும் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 4மணி வரை நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திற்கு சமுகமளித்து பதிவுகளை மேற்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந் தனன் அறிவித்துள்ளார்.

மீளக்குடியமர்த்தல் தொடர்பான முன்னேற் பாடான நடவடிக்கைகளை மேற்கொள்வ தற்கு தற்போது மேற்கொள்ளப்படும் பதிவு களே பயன்படும் என்பதனால் தயவு செய்து தவறாது தங்களது பதிவுகளை மேற்கொண்டு இந் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங் குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (6)

# குடாநாட்டிலுள்ள 30 பாடசாலைகளில் கணனி அறை அமைக்க நடவடிக்கை

யாழ். குடாநாட்டில் உள்ள 30 பாடசாலை களில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய கணனி அறை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்பிரகாரம் அவ்வப் பாடசலைகளில் கணனிகளைப் பொருத்துவதற்கான மின் இணைப்பு வசதிகளை மேற்கொள்வதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை துரிதப்படுத்தப் பட்டுள்ளதாகவும் மின் இணைப்புக்கள் ஏற் படுத்தப்பட்ட பின் இதற்குரிய கணனிகள் வழங்கப்படும் எனவும் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

ஏற்கனவே கடந்த ஆண்டில் மின் இணைப்புகள் செய்யப்பட்ட பாடசாலைகளில் குறிப்பிட்ட தொகையான கணனிகள் வழங் கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6-7)




யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்ற உயர்தர மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகளைத் தெரிவு செய்வதற்கான கருத்தரங்கை யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி நிகழ்த்துவதையும், கருத்தரங்கில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீ மஹாகணபதி பிள்ளையார் ஆலய வருடாந்த இரதோற்சவம்

இன்று காலை 8.30 மணிக்கு தேரில் ஆரோகணித்தல்

சித்தர்கள் வாழ்ந்த சித்தன்கேணியின்
சிவன் பார்வதி மகனாய் அவதரித்த
சிந்தூர திலக நுதல் சிந்தூர முகமுடையானே !

நண்ணினோர்க்கு நலம் தரும் நாயகனே
நாற்சந்தியில் தரிசனம் தரும் நாயகனே!

தேரில் பவனி வந்து தேசத்தோர் துயர் துடைக்க
நாற்சந்தியில் தரிசனம் தரும் விநாயகனே!

நாடிவந்தோர்க்கு நலம்பல விளைத்திடும்
தேடற்கரிய தெய்வத் திருவுருவே!

அரோஹரா என்னும் ஒலி வானைப் பிளந்திட
பஞ்சமுக விநாயகர் தேரில் ஆரோகணித்து வர

ஊரெல்லாம் கூடி உன்புகழ் உரக்க ஒலித்திட
பாரெல்லாம் உன்றன் கருணைமழை பொழியட்டும்!

ஸ்ரீமஹா கணபதியே!
நின் திருவடி சரணம் சரணம்!!



இரதோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்

உயர் கணக்கியல் கல்லூரி
சித்தன்கேணி

வளர்பிறை பட்டுச்சோலை
சங்கானை

பிள்ளையார் அரைக்கும் ஆலை
சித்தன்கேணி

## உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர்களுக்கான பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

2008 ஆம் ஆண்டில் உயர்தொழில் நுட்ப நிறுவனத்தில் கற்கைநெறியை முழுமை யாகப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான பட்டமளிப்பு எதிர்வரும் ஐப்பசி 26 இல் இடம்பெற உள்ளதால் தகுதியுடைய மாண வர்கள் எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் மக்கள் வங்கியின் SLIATE கணக்கில் 0025100133397613 ரூபா 2 ஆயிரம் வைப்பிலிட்டு அதற்குரிய பிரதியுடன் நிறுவனத்திற்கு சமுகளித்து பதிவாளருடன் தொர்டர்புகொள்ளுமாறு நிறுவனப் பணிப் பாளர் க.கதிரமலை கேட்டுக்கொண்டுள் ளார். (6)

## புலமைப் பரிசில் பயிற்சி பரீட்சை

(சாவகச்சேரி)

மாகாணக் கல்வித் திணைக்கள அனுசர ணையுடன் தென்மராட்சி வலயப் பாடசாலை களில் தரம் 5 க்கான புலமைப்பரிசில் பயிற்சி பரீட்சை-3 இன்று சனிக்கிழமை சகல பாட சாலைகளிலும் நடைபெறவுள்ளது.

முன்பு அறிவிக்கப்பட்ட நிலையங்களில் வினாத்தாள்களை அன்றைய தினம் காலை யில் பெற்று பரீட்சையை நடத்தும்படி தென் மரட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேம காந்தன் அறிவித்துள்ளார். (6-29)

## திருமுறைத் திருவிழா

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் திருமுறைத் திருவிழா நாளை காலை 7 மணிக்கு அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் ஆலய மண்ட பத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றத் தலைவர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அதிபர் திருமதி தனரஞ்சனி துரைசிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன், நிகழ்வில் ஆசியுரையை அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர் ஆலய பிரதமகுரு நா. யோகீஸ்வரக்குருக்கள் வழங்குவார்.

அத்துடன் 2009 ஆம் ஆண்டு யாழ்.சைவ பரிபாலனசபை நடத்திய பண்ணிசைப் போட்டி கீழ்ப்பிரில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் பெற்ற யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவி செல்வி ச.அருந்ததி கௌரவிக்கப்படவுள்ளார். (6-4)

## போயா ஆன்மீக நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நகரசங்கீர்த்தனம் இடம்பெற்று காலை 9 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகி ஓம்காரம், வேதபாராயணம், தியானம், சாதனை, பஜனை, சிறப்புச் சொற்பொழிவு, நாராயண சேவை என்பவற்றுடன் மதியம் 12.30 மணிக்கு நிறைவு பெறும். (6)

## அறவழி உற்பத்தியக திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக் குழு நிறுவனத்தின் அறவழி உற்பத்தியக திறப்பு விழா எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.30 மணிக்கு அறவழி வளாகத்தில் அறவழிப் போராட்டக் குழுத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக் தென் மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கலந்து சிறப்பிப்பதுடன் கௌரவ விருந்தி னராக வூஸ் பிரதி வெளிக்களப் பணிப்பாளர் வே.ஜெயராஜசிங்கம் கலந்துகொள்ளவுள் ளார். (6-4)

## பால் விற்பனை நிலைய திறப்பு விழா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி கால்நடை வளர்ப்போர் கூட்டு றவு சங்கத்தினரால் நாளை மறுதினம் திங்கட் கிழமை காலை10 மணியளவில் சாவகச்சேரி இராமலிங்கம் வீதியில் அமைந்துள்ள கடைத் தொகுதியில் உள்ள கட்டடத்தில் பால் விற்பனை நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது .

சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவிஆணையாளர் சிவலிங்கம் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக தென் மராட்சிப் பிரதேச செயலாளர் செ.ஸ்ரீநிவாசன், நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறு முகம், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் ராஜாராம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (6-29)

## வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை

(சாவகச்சேரி)

1999 ஆம் ஆண்டு மாகாண அரசாங்க சேவையின் அபிவிருத்தி உதவியாளர், நிதித் திட்டமிடல் உதவியாளர், மருத்துவ ஆவண காப்பாளர், பாடசாலை முகாமைத்துவ உதவி யாளர், உள்ளூராட்சி உதவியாளர் ஆகிய பதவி களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பட்டதாரி களுக்கான முதலாம், இரண்டாம் வினைத் திறமைகாண் தடைப்பரீட்சைக்கான விண் ணப்பங்கள் மாகாண பொதுச்சேவை ஆணைக் குழு செயலாளரால் கோரப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை பணி யாற்றும் திணைக்களத்தின் ஊடாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (6-29)

# இலங்கை அரசியலமைப்பின் கீழ் பாராளுமன்றத்துக்கு வரம்பில்லா சட்டம் இயற்றும் அதிகாரம் உள்ளதா?

*(நேற்றைய தொடர்ச்சி)*

இதன்கீழ் வட மத்திய மாகாண மேல் நீதிமன்றம் 2008 ஆம் ஆண்டு மேமாதம் 14 ஆம் திகதி அம் மாகாண மேல் நீதிமன்ற வழக்கான HC 333/04 இல் எழுந்த சட்ட பிரச்சினை ஒன்றைத் தீர்க்கும்படி உயர் நீதிமன்றத்திடம் கோரியது.

அவ்வழக்கில் எழுந்த சட்டப்பிரச்சினையானது என்னவெனில், இலங்கை தண்டனைச் சட்டக்கோவை (Penal Code) யின் 364 (2) ஆம் பிரிவு 1955 ஆம் ஆண்டு 22ஆம் திகதி திருத்தப்பட்டு தண்டனை விதிப்பதில் நீதிமன்றத்தின் தன்மதியதிகாரம் (Judicial Discretion) நீக்கப்பட்டு மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளியாகக் காணப்படுபவருக்கு கட்டாயம் சிறைத்தண்டனை (Mandatory Sentence) வழங்க வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது இலங்கை அரசியலமைப்பின் 4C,11,12(1) ஆம் உறுப்புரைகளுக்கு ஒத்ததாக இருக்கிறதா? எனத் தீர்ப்பளிக்குமாறு மேற்படி மேல் நீதிமன்றம் உயர் நீதிமன்றத்தை வேண்டியது.

## நீதிமன்றம் அதனை கட்டுப்படுத்தலாமா?

இதில் கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டத்திற்கு மீளாய்வு இல்லை என்பதனால் மேற்படி தண்டனைச் சட்டக்கோவைத் திருத்தத்திற்கும் மீளாய்வு இல்லை என்பதாகும். ஆனாலும் உயர்நீதிமன்றம் அரசியலமைப்பின் பொருள் கோடலின் கீழ் மேற்படி தண்டனைச் சட்டக்கோவையின் திருத்தத்தை அதாவது கட்டாய தண்டனையை பின்பற்றத் தேவையில்லை என்றது. அதற்குக் காரணம் அரசியலமைப்பின்4C,11,12(1) ஆகிய உறுப்புரைகளுக்கு முரணாக மேற்படி தண்டனைச் சட்டக்கோவை திருத்தம் இருப்பதாகவும் பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட மேற்படி தண்டனைச் சட்டக் கோவை திருத்தம் அரசியலமைப்பு உறுப்புரைகளுக்கு மேல் செல்ல முடியாது என்றும் அரசியலமைப்பு உறுப்புரைகளே மேல் ஒருங்கினிற்பதால் பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டங்கள் அரசிய லமைப்புக்கு அமைய இருக்கவேண்டும் என்று கூறியது. இத் தீர்ப்பின் மூலம் இலங்கை நீதிமன்றங்கள் பாராளுமன்றத்தால் ஆக்கப்பட்ட சட்டங்கள் அரசியலமைப்புக்கு அமைய ஆக்கப்பட்டுள்ளனவா என ஆராயலாம் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்மூலம் இலங்கை நீதிமன்றங்களுக்கு ஆக்கப்பட்ட சட்டங்களை ஆராய நீதிமன்ற மீளாய்வு இல்லை என்ற கருத்தை மாற்றியுள்ளன. உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, என்.ஜீ. அமரதுங்க, ஜே.பீ.ஏ.ரட்னாயக்க ஆகியோரைக் கொண்ட நீதியரசர் குழுவே இத்தீர்ப்பை வழங்கியது. நீதியரசர் பீ.ஏ.ரட்னாயக்க எழுதியுள்ள தீர்ப்பை ஏனைய நீதியரசர்கள் இருவரும் ஆமோதித்துள்ளனர்.

இத் தீர்ப்பு இலங்கையின் வரலாற்றில் முக்கிய தீர்ப்பாக விளங்குகிறது. அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகளில் நீதிமன்றங்களுக்குள்ள அதிகாரத்திற்கு சமமான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளதுட ன் பாராளுமன்றம் சட்டங்களை இயற்றும் அதிகாரம் கொண்டதாக இருப்பினும் அது சில கட்டுப்பாடுகளுக்கமையவே சட்டங்களை இயற்றவேண்டும் என்ற ஒரு நிலையையும் தோற்றுவித்துள்ளது.

"Constitution Art 80 (3) Does not Present Courts from Interpreting Laws in a Consflict Between an Ordinary Law and the Constitution the Constitutional Provision Prevails Over Ordinary Law " என்று உயர் நீதிமன்றம் கூறியது.

*குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் தீர்க்கப்பட்ட பிணை சம்பந்தமான தீர்ப்பு*

திலங்கசுமதிபால எதிர்பொலிஸ்மா அதிபர்.

இவ்வழக்கு பிணை தொடர்பான வழக்காகும். குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் மேன் முறையீட்டு நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்தது. பிணைச்சட்டத்தின் கீழ் சந்தேக நபர் ஒருவருக்கு பிணை வழங்கும் அதிகாரம் நீதிமன்றுக்கு இருந்தது.ஆனால், சில சட்டங்களின் கீழ் குற்றம் செய்ததாகக் கூறி ஒரு சந்தேக நபரை நீதிமன்றத்திற்கு ஆஜர் செய்யும்போது அவருக்கு பிணை வழங்குவதற்கு பிணைச் சட்டம் செல்லாது என்றும் அவர் தவறு இழைத்த சட்ட ஏற்பாடுகள் பிணைக்கும் செல்லும் என்றும் சில சட்டங்கள் கூறுவதுண்டு. உதாரணமாக குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் ஒருவர் குற்றம் இழைத்தால் அவருக்கு பிணைச் சட்டத்தின் கீழ் பிணை வழங்கமுடியாது என அச் சட்டம் கூறுகிறதைக் காணலாம்.

இந்நிலையில் திலங்க சுமதீபால என்பவர் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்தார் என குற்றம்சாட்டப்பட்டு நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டார். இவருக்கு பிணைச்சட்டத்தின் கீழ் பிணை வழங்க முடியாது என நீதிவான் நீதிமன்றம் கூறியது. அவர் அதனை ஆட்சேபித்து மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிணை கேட்டு விண்ணப்பித்தார். மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் எழுந்த வினா என்னவெனில் குடிவரவு குடியகல்வு சட்டத்தின் கீழ் ஒரு சந்தேக நபருக்கு பிணை வழங்க ஏற்பாடுகள் இல்லாமலும் வழக்கு முடிவு பெறும் வரையும் அவரை விளக்கமறியலில் வைக்கவும் வேண்டுமென்று கூறுவது இலங்கை அரசியல் அமைப்பில் உத்தரவாம் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை பாதிக்கின்றதா? என்பதாகும்.

நீதிமன்றம் தீர்க்கமாக ஆராய்ந்து அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் மீயுயர்வானவை என்றும் அதற்கு மாறாக பாராளுமன்றம் ஆக்கும் சட்டங்கள் வரம்பு இழந்தது என்றும் கூறி அவருக்கு பிணை வழங்கியது. இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் பொருள்கோடலின் மூலம் பாராளுமன்ற சட்டம் ஆக்கப்பட்டதன் பின்னரும் மீளாய்வுக்கு ஒப்ப அதனை ஆராய்ந்தது. உண்மையில் அரசியலமைப்பின் 80(3) விதி நீதிமன்றங்கள் சட்டத்தை ஆராய்ந்து தீர்ப்புக் கூற நீதிமன்றங்களுக்கு தடை விதிக்கவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது குடிவரவு குடியகல்வு சட்டம் திருத்தப்பட்டு பிணை வழங்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மேன்முறையீட்டு நீதிமன்றம், உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டிய குறைபாடுகள் பாராளுமன்றத்தால் நீக்கப்பட்டுள்ளன.

மேற்படி வழக்குகளைப்போலவே பொது சன பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆக்கப்படுகின்ற விதிகளையும் நீதிமன்றம் ஆராய்ந்து அவை அரசியலமைப்பு ஏற்பாடுகளை விட வரம்பு இழந்து இருந்தால் அவற்றை ரத்துச் செய்த வழக்குகள் பலவும் உண்டு.

## சட்டத்தரணி கே.ஜி.ஜோன்


இவற்றில் இருந்து பெறப்படுவது என்னவெனில், இலங்கையின் சட்டமியற்றும் மீயுயர் அதிகாரம் பாராளுமன்றத்திடமே இருக்கிறது என்று கூறினாலும் அவை ஆக்குகின்ற சட்டங்கள் அரசியலமைப்பு உறுப்புரைகளுக்கு ஒவ்வாததாக இருந்தால் அவற்றை பொருள்கோடல் மூலம் வியாக்கியானம் செயது செல்லுபடியற்றதாக்க நீதிமன்றங்களுக்கு உரிமையுண்டு என்பதாகும்.

ஆகவே, இலங்கை அரசியலமைப்பு படி பாராளுமன்றமா? நீதிமன்றமா? அரசியலமைப்பா? மீயுயர் அதிகாரம் கொண்டு விளங்குகிறது என்ற வினாவைப் பார்த்தால் மூன்றும் ஒன்றுக்கு ஒன்று முரணாக இல்லாமல் மக்களது உரிமைகளைப் பாதுகாக்கும் கடமைகளைக்கொண்டுள்ளதைக் காணலாம். (முற்றும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

# அடிமைச் சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

**74**



மேலே தாம் கண்ட நிகழ்வுகள் ஒபாமாவின் பயணத்தில் ஒரு திசையைத் தான் காட்டி நின்றன. அதாவது அரசாங்க பாடசாலைகளின் மறுசீரமைப்பின் மூலம் தான் இளைஞர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியும் என்ற உறுதியை ஒபாமாவுக்குத் தந்தன.

ஆகவே ஒரே வழி கல்விதான். ஒபாமா இதற்கான செயல் திட்டம் ஒன்றை உருவாக்கி தன் குழுவின் தலைவர்களுக்குச் சமர்ப்பித்தார்.

இத் திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெறவில்லை. சுயநலமும் ஒரு காரணம். கிறிஸ்தவ தேவாலயங்களின் வயோதிப அங்கத்தவர்கள் தங்கள் பிள்ளைகள் வளர்ந்து விட்டார்கள்என்றனர். இளைய சமுதாயத்தினர் தங்கள் குழந்தைகளை கத்தோலிக்கப் பாடசாலைகளில் சேர்த்து விட்டனராம். திருச்சபை அங்கத்தவர்களாக இருப்பவர்கள் ஆசிரியர்கள், அதிபர்கள், மாவட்ட மேலாளர்கள். அவர்களுக்கு அரச பாடசாலைகளின் குறைபாடுகள் நன்றாகத் தெரியும்.

ஆகவே தங்கள் பிள்ளைகளை அந்தப் பக்கம் அனுப்பமாட்டார்கள். ஆனாலும் அவர்கள் அந்தப் பள்ளிக்கூடங்களில் ஏற்படக் கூடிய எந்த மாற்றத்திற்கும் தடையாக இருந்தனர். கல்வியில் ஏற்பட்டிருக்கும் பின்னடைவுக்குக் காரணம் போதிய நிதிவளம் இன்மையே என்பர். அது உண்மைதான். சீரமைப்பு என்பது வெள்ளையர்களின் தந்திரம். அது உண்மையல்ல மாணவர்கள் சோம்பேறிகள். கட்டுப்பாடற்றவர்கள். எதிலும் தாமத புத்தி என்பார்கள். இவ்வாறான பேச்சுக்கள் கல்வியாளர்களிடமிருந்து வந்தபோது ஒபாமா ஆத்திரம் கொண்டார்.

தானும் தன் நண்பர் ஜோணும் தனித்து கல்விச் சீர்திருத்தம் செய்வதில் ஆர்வம் காட்டினர். கைல் பயின்ற உயர்நிலைப் பள்ளி நல்ல பெயர் பெற்ற நிறுவனம். ஆகவே அங்கிருந்து தன் முயற்சியில் இறங்கினார் ஒபாமா. அந்தப் பள்ளிக்கூடத்தின் அதிபர் டாக்டர் கிங் . அவரும் ஒபாமாவின் சமூக சேவைக்கு தன்னாலான சகல உதவியையும் தரமுன்வந்தார்.

டாக்டர் கிங் பாடசாலை ஆலோசகர் அசந்தே மோறன் அவர்களோடும் கலந்துரையாடும்படி வேண்டினார். அதிபர் கூறியவாறு அசந்தேயின் அலுவலகம் பள்ளிக் கட்டடத்தின் பின் பகுதியிலிருந்தது. அவரிடம் ஒபாமாவும் ஜோணும் சென்றபோது ஏதோ ஆபிரிக்க நாடு ஒன்றில் காணும் காட்சிகள் அனைத்தையும் அவரின் அலுவலக அறையில் காணமுடிந்தது. பல ஆபிரிக்கப் பொருட்கள் அங்கு காட்சி தந்தன.

அசந்தே ஒபாமாவையும் ஜோணையும் நோக்கி ஒரு குட்டி விரிவுரையே நடத்தினார். அது கறுப்பினச் சிறார்களின் கல்வி பற்றியதாக இருந்தது.

"முதலில் அரச பாடசாலைகளின் கல்வி முறையானது கறுப்பினக் குழந்தைகளை கல்வியில் முன்னேற்றும் நோக்கம் கொண்டதல்ல. சமுதாயத்தை கட்டுக்குள் கொண்டு வருதற்காக அமைக்கப்பட்டது. உண்மையில் அவை கறுப்பினத்தவர்களுக்கான சிறைச் சாலைகளே. கறுப்பு மாணவர்கள் இச் சிறைகளிலிருந்து தப்பியோடி வெள்ளையர்களுக்கு உபத்திரவமாக மாறும்போதுதான் சமூகம் இம் மாணவர்களுக்கு உண்மையில் கல்வி போதிக்கப்பட்டுள்ளதா? என்று சிந்திக்கத் தொடங்குகிறது.

கறுப்பினக் குழந்தைகள் தங்களை முதலில் புரிந்துகொள்ளப் பயிற்றுவிக்க வேண்டும். அவர்களின் உலகம் தனிப்பட்டது. அவர்களின் கலாசாரம் பற்றியும் தாம் வாழும் சமுதாயம் பற்றியும் சொல்லிக் கொடுக்க வேண்டும். எந்தக் கல்வி முறையும் இவ்வாறு தான் ஆரம்பமாக வேண்டும்.

அது அறிவுத்தேடலுக்கான ஆவலையுண்டாக்கி, தன் சூழலை எதிர்கொண்டு வென்று, ஒரு புதிய புத்தகத்தில் காலடி வைக்க அவர்களுக்கு வாய்ப்பளிக்கும். ஆனால் கறுப்பர்களைப் பொறுத்தவரை எல்லாமே தலைகீழாகத்தான் நிகழ்கிறது. பள்ளிக்கூடத்தில் அவன் படிப்பது மற்றவர்களின் வரலாறும், கலாசாரமும் ஆகும். இவையே அவனைப் படிப்படியாக வெறுத்து ஒதுக்கியது. அவனின் மனிதப் பிறவியையும் கூட மறுத்தது.

ஆகவே தான் அவன் -கறுப்பன்-படிப்பில் வெறுப்படைந்து நாளடைவில் ஆர்வம் குன்றினான். பையன்கள் என்ன செய்ய முடியும்? யார் அவர்களுக்கு வழிகாட்ட முடியும்? அவர்களில் பாதிப்பேருக்கு தந்தைமாரே இல்லாத சூழல் மனிதனாக மாற அவனுக்கு முன்மாதிரிகள் கிடையாது. விபரீத விளைவுக்கு இது வழிவகுத்தது.

## ஜம்பொன்

(தொடரும்)

# சூழல் மேம்பாடும் அனர்த்த நிவாரணங்களும்



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD.Durham
முன்னாள் துணைவேந்தர்

யூன் 5ஆம் திகதி உலக சூழல் தினமாகும். 1972 இல் சுவிடன் ஸ்ரோந்கொமில் நடைபெற்ற சூழல் மாகாநாட்டிற்குப் பின்னர் கடந்த 37 ஆண்டுகளில் சர்வதேச ரீதியாக சூழல் விழ்ப்புணர்ச்சி மக்களிடையே அதிகரித்து வருவதையும், இதனுடன் தொடர்பான பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்று வருவதையும் காணமுடிகின்றன. சூழல் விடயங்களும் அனர்த்த நிவாரணங்களும் சர்வதேச நிகழ்ச்சி நிரல்களில் முன்னர் இல்லாத அளவுக்கு இன்று முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. ஐக்கிய நாடுகள் சபை, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் நாடுகளின் பிராந்திய கூட்டுக்களின் செயற்பாடுகளில் சூழல் சார்ந்த விடயங்களும், அனர்த்த நிவாரண தந்திரோபாயங்களும் முக்கியம் பெற்று இருப்பதைக் காணலாம்.

இவ்விடயங்களில் சர்வதேசம் இணைந்து செயற்பட வேண்டிய நிலைப்பாடுகளை நாடுகள் உணர்ந்து, அதற்கேற்றவாறு செயற்பட விரும்பும் போக்கைக் காண முடிகின்றது. சூழலை மேம்படுத்த மேற்கொண்ட முயற்சிகளும், அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்த முறைகளும், அதில் கண்ட அனுபவங்கள் நாடுகளுக்கு நாடு வேறுபடுகின்றன.

ஐக்கிய அமெரிக்கா போன்ற வளர்ச்சி பெற்ற நாடுகளில் கூட வெள்ள, புயல் அனர்த்தங்களுக்கு சரியாக முகம் கொடுக்க வில்லை. இது போல கலிபோர்னியாவில் ஏற்பட்ட காட்டுத் தீ அழிவை தடுக்க சரியான முறைகள் கையாளப்படவில்லை என குறை கூறப்படுகின்றது. இதனால் வளர்ச்சியடைந்த, அடைந்து வரும் நாடுகள் யாவும் சூழல் மேம்பாட்டுக்கும், அனர்த்த நிவாரண செயற்பாட்டுக்கும் பல முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கின்றன.

ஒவ்வொரு நாடுகளும் சூழல் மேம்பாட்டிற்கு, பல்வேறு சட்டதிட்டங்களையும், அவற்றை செயற்படுத்த தேசிய, பிராந்திய மற்றும் பல நிர்வாக மட்டங்களில் நிறுவனக் கட்டமைப்புக்களை ஏற்படுத்தியிருப்பதைக் காணமுடிகின்றன. சூழலை மேம்படுத்த மேற்கொண்ட முயற்சிகளில் வெற்றி நிலையளவு நாட்டுக்கு நாடு வேறுபட்டுள்ளன. வளர்ச்சி பெற்ற நாடுகளில் வள் வாய்ப்புக்கள் அதிகமாக இருந்ததால் சூழல் மேம்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளன. அதே நேரத்தில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் சூழல் மேம்பாட்டு முயற்சிகள் பல ஆரம்ப நிலையிலேயே காணப்படுகின்றன.

இலங்கையில் சுற்றுச் சூழல் செயற்பாடுகளும், அனர்த்த நிவாரண செயற்பாடுகள் பல மட்டங்களில் தேசிய, மாகாண, மாவட்ட, பிரதேச செயலக மட்டங்களில் முன்னெடுக்கப்படுகினறன. சூழல், அனர்த்த நிவாரண மேம்பாடுகள் சார்ந்த பல்வேறு சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டிருப்பதுடன் பல நிறுவனக் கூட்டமைப்புகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டம் 2004 டிசெம்பரில் சுனாமியாலும், 2008 ஆம் ஆண்டு நிஷா புயல் வெள்ளத்தாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு மக்கள் இவ்விரண்டு அனர்த்த அனுபவங்களில் இருந்து இன்னும் விடுபடவில்லை. சுனாமியால் பெரிய உயிர் சேதமும் நிஷாப் புயலால் பெருமளவு பொருட்சேதமும் ஏற்பட்டன. மேலும் நிஷாப் புயலால் மிகப் பழைய, பெரிய மரங்கள் வேரோடு சாய்ந்தன. ஏழு நாட்களில் 766 மி.மி மழையினால், இதனுள் ஒரு நாளில் 389 .8 மி.லி மழையினால் வரலாறு காணாத வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு தாழ்வான பகுதிகளிலிருந்த மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி பொது இடங்களில்தஞ்சம் அடைந்ததுடன் பெருமளவு பொருள் இழப்புக்களையும் சந்தித்தனர். மேலும் மின்சாரம் ,தொலைத்தொடர்பு, போக்குவரத்துத்துறைகளில் பெரும் இழப்புக்கள் ஏற்பட்டன.

மேலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் நீர் மாசுபடுதல், நீர் உவராதல், புழுதிப் புயல் போன்ற பிரச்சினைகளைத் தோற்றிவித்துள்ளன. மேலும் சூழலுக்கு ஏற்பில்லாத தாவரங்கள், இப்பில் இப்பில், பாதினியம் போன்றனவற்றின் பெருக்கமும், பன்றி, குரங்கு, வெளவால் போன்றவற்றின் வருகையும், பெருக்கமும் புதிய பிரச்சினைகளை தோற்றிவித்துள்ளன.

மேலும் தாவரங்கள் சிலவற்றின் அழிவும் உதாரணம் முள் முருங்கை, புதிய சூழல் பிரச்சினைகளைத் தோற்றிவித்துள்ளன. இப் பின்னணியில் சூழ்லும், அனர்த்த நிவாரண நோக்கில் யாழ்ப்பாண மாவட்ட பிரச்சினைகள் கீழே நோக்கப்படுகின்றன.

இன்று அனர்த்த முகாமைத்துவம் உலக நாடுகளின் கவனத்தைப் பெருமளவிற்கு ஈர்க்கும் விடயமாகவுள்ளது. உலகின் பல பகுதிகள் இயற்கை அனர்த்தங்களாலும் மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களாலும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றன. உயிரிழப்பு, உடைமையிழப்பு, உறவிழப்பு, சமூக–பொருளாதார இழப்பு போன்றவற்றால் ஏற்படும் பாதிப்புக்களின் அளவும், தாக்கமும் நாட்டிற்கு நாடு இடத்திற்கு இடம் வேறுபடுகின்றன.

இந்தோனேசியா, வங்காளதேசம் போன்ற நாடுகள் தொடர்ச்சியாகப் பலதரப்பட்ட அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு வருகின்றன. உள்நாட்டுப் போர்கள், கலவரங்கள் நடைபெறும் நாடுகள் இயற்கை அனர்த்தங்களை விட கூடுதலாக, மனிதனால் ஏற்படும் அனர்த் தங்களாலேயே பாதிப்படைகின்றன.

இதனால் மக்கள் உயிர் மருத்துவ (Bio Medical), உள சமூகத் (Psycho -Social) தாக்கங்களுக்கு உட்படுகின்றர். உயிர் மருத்துவ உடனடித்தாக்கங்களாக இறப்பு, வெளிக் காயம், உட்காயம் ஆகியனவும் நீண்ட காலத் தாக்கங்களாக இல்லிடம், உணவு அடிப்படை சுகாதார வசதிகள், மருத்துவக் கவனிப்பு ஆகியன இல்லாமையும், உள–சமூகத்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டோரின் நடத்தைக் கோலங்கள், புலக்காட்சி ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்கள் குறிப்பாக கவலை, ஏக்கம்,யோசனை, விரக்தி,பற்றின்மை ஆகியனவும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டியன. இவ்வாறு பாதிக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரம் குன்றி, பொருளாதார நடவடிக்கைகள் சுருங்கி,சமூக ஸ்திர நிலையும் கீழ் நிலை அடைகின்றது.

எனவே இம் மக்களுக்கு வேண்டிய நிவாரணம்,புனர்வாழ்வு,புனருத்தாரணப் பணிகளை மேற்கொண்டு இவர்களை இயல்பு நிலைக்கு கொண்டு செல்லவேண்டும். இதனால் சர்வதேச ரீதியாக அரசாங்கங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் அனர்த்த நிவாரணத்தில் பெரும் நிதியை வருடாவருடம் செலவு செய்கின்றன.

மேலும் அனர்த்தங்களையும் மனித அவலங்களையும் குறைப்பதற்காக அனர்த்த முகாமைத்துவம் என்ற கருத்தை முன்னெடுத்து, அதை நடைமுறைப் படுத்துவதற்கு வேண்டிய கட்டமைப்புக்களை உருவாக்கி செயற்படுத்துவதில் பல நாடுகள் ஈடுபட்டுள்ளன. இவ்வகையில் இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு உருவாக்கப்பட்டுள்ளது.

மேலும் அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையும் (National Council For Disaster Mangement) அனர்த்த முகாமைத்துவ நிலையமும் (The Disaster Mangement Centre) இத் துறையில் செயற்பட்டு வருகின்றன. மேலும் மாவட்ட, பிரதேச செயலகப் பிரிவு, கிராம அலுவலகர் பிரிவு அடிப்படையில் அனர்த்த முகாமைத்துவ செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

2004 டிசம்பர் சுனாமியால் ஏற்பட்ட பாதிப்புக்களின் விளைவே இத்தகைய கட்டமைப்புக்களின் தோற்றமாகும். அனர்த்தங்களில் இருந்து மக்களைப் பாதுகாத்தல், பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பேணுதல்,அபிவிருத்தி செய்தல், கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்தி இடர்களை எதிர்கொள்ள ஆயத்தமாகுதல்,இடர்கள் வராது தடுத்தல்,பதில் நடவடிக்கைகள், நிவாரணம்,புனர்வாழ்வு, புனருத்தாரணம், மக்களுக்கு விழ்ப்புணர்ச்சியும் பயிற்சியும் அளித்தல், இடர் முகாமைத்துவமும் அவற்றை தணித்தலும் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் அனர்த்தங்களால் ஏற்படும் தாக்கங்களைக் குறைக்கலாம்.

சுற்றுச்சூழலில் இயற்கை நிகழ்வுகளாக இடம்பெறும். புவி நடுக்கம், எரிமலை, வெள்ளப்பெருக்கு வறட்சி,புயல் போன்றன இயற்கை அனர்த்தங்களாகும். அனர்த்தங்களின் இரண்டாவது வகை மனிதனால் ஏற்படுத்தப்படும் அனர்த்தங்களாகும்.

### இயற்கை அனர்த்தம்

இதனை 3 வகைகளாகப் பிரிக்கலாம்.

1. காலநிலை அனர்த்தம்
2. புவிவெளியுருவ புவிச்சரித அனர்த்தம்
3. உயிரியல் அனர்த்தம்.

### காலநிலை அனர்த்தம்

இது சூறாவளி (ஹறிக்கேன், தைபூன், ரோனாடோ) பனிச்சூறாவளி, அனல் காற்று, திடீர் கடும் குளிர் காற்று,வெள்ளப் பெருக்கு (கரையோரப் பகுதி, ஆற்றுக் கழி முகம்) வறட்சி, பனிக்கட்டியாதல் ஆகும்.

### புவிவெளியுருவ புவிச்சரித அனர்த்தம்

புவி நடுக்கம்,எரிமலை வெடிப்பு, நிலவமுக்குகை,பனிப்பாறைச்சரிவு சுனாமி ஆகும்.

### உயிரியல் அனர்த்தம்

தாவரம் சார்ந்த அனர்த்தம்– நச்சுத் தாவரங்கள் பூஞ்சணம் சார்ந்த நோய்கள் (Fungus Diseases) நீரை மாசுறுத்தும் தாவரங்கள், வசந்த கால சளிக்காய்ச்சல் மற்றும் உயிரினத்தால் ஏற்படும் நோய்கள் உதாரணம் மலேரியா,சிக்கின் குனியா, வெட்டுக்கிளியால் ஏற்படும் அழிவு முதலியன.

### மனிதனால் ஏற்படும் அனர்த்தங்கள் இரு வகை

மனித நடவடிக்கையாலும்,சூழல் முகாமைத்துவமின்மையாலும், இயற்கையில் ஏற்படும் அனர்த்தம்–ஓசோன் படை குறைவடைதல்,அசிற்மழை,மண்ணில் நைதரேற் அதிகரித்தல்(Eutrophichtion), ஆபத்தான கழிவு அகற்றல் போன்றவற்றால் நிலம் வளம் இழத்தல், நீர், காற்று மாசடைதல் மேலும் இரசாயன விபத்து (உதாரணம் இந்தியாவில் போப்பால் இரசாயனத் தொழிற்சாலையில் ஏற்பட்ட அனர்த்தம்), அணுசக்தி சார்ந்த அனர்த்தம் (உதாரணம் உக்கிரேனில் சேனவல்லில் ஏற்பட்ட அனர்த்தம்), கடற்பகுதிகளில் எண்ணெய்க் கப்பல்களின் விபத்துக்கள் மற்றும் நகர–காட்டுத்தீ மனிதனால் உருவாக்கப்பட்டமையினால் ஏற்படும் பிணக்குகளால் உருவாகும் யுத்தங்கள், உள்நாட்டுப் போர்கள், கலகங்கள் ஏற்படும் உயிரிழப்பு, சொத்திழப்பு, இடப்பெயர்வு போன்றன மனிதனால் ஏற்படுத்தப்படும் இரண்டாவது வகை அனர்த்தமாகும்.

இலங்கையில் ஏற்படும் இயற்கை அனர்த்தங்களை நோக்கின் தென்மேற்கு தாழ்நிலப் பகுதிகளிலும், ஆற்றுப் பள்ளத்தாக்குகளிலும் வெள்ளப்பெருக்கும்,மலைநாட்டில் மண்சரிவும்,வெள்ளப்பெருக்கும்,வரண்ட வலயத்தில் வரட்சியும் சில காலங்களில் வெள்ளப்பெருக்கும் கிழக்குக் கரையோரத்தில் சூறாவளித் தாக்கமும்,தென்மேற்கு கரையோரப் பகுதியில் கடல் கொந்தளிப்புகளும் முக்கியமான அனர்த்தங்களாகும்.

2004 ஆம் ஆண்டும் சுனாமி கிழக்கு, தெற்கு, தென்மேற்கு கரையோரப் பகுதிகளைப் பெரிதும் தாக்கியது. 40 ஆயிரம் வரையிலான மக்கள் இதனால் மரணித்ததுடன் பெரும் பொருள் நஷ்டமும் நாட்டிற்கு ஏற்பட்டது. மேலும் காடழித்தல் மண்வளம் குறைதல், நீர் மாசடைதல் திண்மக்கழிவு அகற்றலுடன் தொடர்பான அனர்த்தங்களும் மனிதனால் உருவாக்கப்படுபவை.

கடந்த 3 தசாப்தங்களுக்கு மேலாக நாட்டில் இடம்பெறும் முடிவுறாத யுத்தம், இனக் கலவரங்கள் போன்றவற்றால் மக்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியிருக்கின்றார்கள்.

யாழ்ப்பாண குடாநாடு தனித்ததொரு புவியியற் பிரதேசம். யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயற்கை அனர்த்தங்களின் கடும் தாக்கம் பொதுவாக குறைவாக இருப்பிலும் சிறிய அளவில் பல பகுதிகள் பாதிக்கப்பட்டுகின்றன.

ஆனால் 2004 டிசம்பரில் ஏற்பட்ட சுனாமியால் மாவட்டத்தில் 971 பேர் மரணமடைந்தார்கள்,390 பேர் காணமாமல் போனார்கள், ஆயிரத்து 647 பேர் காயப்பட்டார்கள், 13 ஆயிரத்து 652 குடும்பங்கள் இடம் பெயர்ந்தன. மொத்தத்தில் 48ஆயிரத்து 729 பேர் இடம் பெயர்வுக்குட்பட்டனர். மேலும் 48 பேர் விதவைகளாகவும் 128 பேர் அநாதைகளாகவும் விளங்கினர். மேலும் 5ஆயிரத்து 391 வீடுகள் முழுமையாக சேதத்துக்குள்ளாகின. அண்மைக்காலத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய இயற்கை அனர்த்தம் இதுவாகும்.

இவ் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்றும் இத் தாக்கத்திலிருந்து முற்றாக மீளவில்லை. மிகவும் பாதிக்கப்பட்ட மணற்காட்டு மக்கள் பாதிப்பிலிருந்து மீளமுடியாமல் இருக்கிறார்கள். மேலும் யாழ்ப்பாண மாவட்டம் குறிப்பாக புயல்,வெள்ளப் பெருக்கு, வரட்சி அனர்த்தங்களால் காலத்துக்குக் காலம் பாதிக்கப்பட்டு வந்துள்ளது.

1964 டிசம்பர் 24ஆம் திகதி வீசிய கடும் புயலால் இம்மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது. பெரும் பொருட்சேதம் மயிலிட்டி மற்றும் கரையோர மீன்பிடிக்கிராமங்களுக்கு ஏற்பட்டது. இம் மாவட்டத்தின சராசரி மழை வீழ்ச்சி 1350 மில்லிமீற்றருக்கு குறைவாக இருப்பதுடன் மழைவீழ்ச்சியின் நம்புதகைமையும் குறைவாகவுள்ளது. 2008 இல் நிஷாப் புயலால் 766 மி.மி. மழை ஏழு நாட்களில் கிடைத்தது.

மழைவீழ்ச்சி அளவில் கூடுதலாக ஏற்றம் இறக்கம் காணப்படுவதுடன், மழைவீழ்ச்சியின பரம்பல் பரவலாகயிலாது ஒரு பருவத்தில் குறிப்பாக ஒக்டோபர் நடுவிலிருந்து டிசம்பர் நடுப்பகுதி வரை செறிவான வீழ்ச்சியைக் கொண்டுள்ளது.

இக் காலத்தில் மழை தாழமுக்கத்துடனும் புயல் காற்றுடனும் இணைந்து வருவதால் குறுகிய நாட்களுள் கூடுதலான மழைவீழ்ச்சி காரணமாக தாழ்நிலப் பிரதேசங்கள், நெற்செய்கை பரப்புக்கள் குடியிருப்புப் பகுதிகள் வெள்ளதால் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக நலிந்த பிரிவினர் வாழும் குடியிருப்புக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆயிரம் சிறு குளங்கள் உண்டு. இவைகள் நிரம்பி வழிந்து சிறு வாய்க்கால்கள், பருவகால சிற்றருவிகள் வழியாக வெள்ளம் வெளியேறும். எனினும் வடி கால் பல இடங்களில் தடைப்பட்டு இருப்பதால் வெள்ளம் பரவி பாய்ந்து பெரும் சேதங்களை ஏற்படுத்துகின்றது.

மேலும் கடல்கொந்தளிப்பு ,புயல்,வறட்சி போன்றவற்றால் குறிப்பிடத்தக்க அனர்த்தங்கள் ஏற்படுகின்றது. நவம்பர், டிசம்பர் மாதங்களில் யாழ்ப்பாணத்தை காலத்துக் குக் காலம் சூறாவளி தாக்குவதால் தாவரப் போர்வை பயிர்செய்கை நிலங்களும் பெரும், பாதிப்புக்குள்ளாகின்றன. சித்திரைக் குழப்பத்தின் மூலம் சிறிய அளவில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. சோழகக்காற்று காலத்தில் காற்றின் கடும் தாக்கத்தால் புழுதிப் புயல் சிறியளவில் பல இடங்களில் ஏற்படுகின்றன. இதனால் மக்கள் பல வசதியீனங்களுக்குட்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் உயிரியல் சார்ந்த நோய்கள்–பொக்களிப்பான், சின்னமுத்து போன்ற நோய்கள் மார்ச், ஏப்ரல் மாதங்களில் ஏற்படுகின்றன. எனினும் தற் பொழுது நோய்களின் தாக்கம் சற்றுக் குறைவாக இருப்பினும் முற்றாக விடுபட்டதென்று சொல்வதற்கில்லை. நுளம்பால் மலேரியா நோய் காலத்துக்குக் காலம் கூடிக் குறைந்து காணப்படுகின்றது. 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆயிரக்கணக்கான மக்கள் கொலராநோயினால் பாதிக்கப்பட்டனர் அண்மைக் காலத்தில் டெங்குக் காய்ச்சல், சிக்குன் குனியா நோயும் மக்களை பாதித்து வருகின்றது.

இத்தகைய இயற்கை அனர்த்தங்கள் மாவட்ட மக்களின் பொருளாதார சமூக செயற்பாடுகளை பாதித்து வருகின்றது. சூழல் முகாமைத்துவம் இன்மையால் தான் சூழல்சார் அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. (தொடரும்)

# தமிழர்களுக்கான உரிமைகளை அறிவிக்குமாறு இலங்கையிடம் வற்புறுத்த வேண்டும்

## மத்திய அரசுக்கு இல.கணேசன் கோரிக்கை

(சென்னை)

இலங்கை அரசு தமிழர்களுக்கு வழங்கப்படும் உரிமைகளை தாமதமின்றி அறிவிக்க இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று இல.கணேசன் கூறியுள்ளார்.

தமிழக பாரதீய ஜனதா கட்சித் தலைவர் இல.கணேசன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒடுக்கி விட்டதாக வெற்றி விழாக் கொண்டாடி வரும் இலங்கை அரசு இந்த இறுதிக்கட்ட போரில் சுமார் 20 ஆயிரம் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டதை மறைத்துவிட்டது.தன் சொந்த நாட்டு மக்களையே அழித்து வெற்றி விழாக்கொண்டாடும் ஒரே அரசுஇலங்கை அரசுதான். வெள்ளைக்கொடி ஏந்திவந்த ஒரு சாராரையும் உலக யுத்த நியதிக்கு மாறாக சுட்டுக் கொன்றது.

இதுகுறித்தெல்லாம் கண்டனம் தெரிவிக்க வேண்டிய இந்திய் அரசு மௌனம் சாதித்தது தான் வியப்பளிக்கின்றது. இலங்கை அரசின் செயலுக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து தீர்மானம் கொண்டு வந்த போது இந்திய அரசு வாக்களிப்பதை தவிர்த்திருக்கலாம். மாறாக இலங்கைக்கு ஆதரவான நிலைப் பாட்டை எடுத்தது.

இந்திய அரசு வழங்குவதாகக் கூறியுள்ள ரூ.500 கோடி நிதியுதவி, உண்மையில் பாதிக் கப்பட்ட தமிழர்களுக்கு சேருமா என்பது சந்தேகமே. எவ்வித நிபந்தனையுமின்றி இந்தியா செய்த உதவிகளுக்கு மாறாக நிபந் தனைகளை இனியாவது விதிக்கலாம்.



அகதிகள் முகாம் சித்திர வதை முகாம் போல செயல் படுவதை மா ற்ற வேண்டும். தமி ழர்களுக்கு வழங்கப்படும் உரிமைகள் குறித்து தாமதமின்றி அறிவிக்க வற்புறுத்த வேண்டும். தகர்க் கப்பட்டுள்ள கிராமங்கள், நகரங்கள்,மருத்துவ மனைகள்,பள்ளிக் கூடங்கள் ஆலயங்களை புனர் நிர்மாணம் செய்ய வற்புறுத்த வேண் டும்.

இலங்கையின் யாழ்ப்பாணத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள்,தமிழ் முஸ்லிம்கள், இந்திய வம்சாவளித் தமிழர்கள் ஆகியோர் குறித்து நிபுணர் குழு தந்த பரிந்துரையை அமுல்படுத்தச் சொல்லி இந்திய அரசு வற்பு றுத்தவேண்டும். இனியாவது இந்திய அரசு இதைச் செய்யுமா? அதை தி.மு.க.அரசு வற் புறுத்துமா? என்பதே இன்றைய கேள்வி.

இவ்வாறு இல.கணசேன் கூறியுள் ளார். (6)

# கோழிப்பண்ணையில் தீ விபத்து; 9 ஆயிரம் கோழிகள் கருகின

(திண்டுக்கல்)

திண்டுக்கல் அடுத்துள்ள தாடிக்கொம்பு அருகே உள்ள காப்பிளியப்பட்டியைச் சேர்ந்த வர் சுப்பிரமணி.இவர் தனக்கு சொந்தமான தோட்டத்தில் கோழிப்பண்ணை வைத்து நடத்திவருகிறார். இதற்காக கூரையால் வேயப் பட்ட 2 செட் அமைத்துள்ளார்.

ஒவ்வொரு செட்டிலும் 4 ஆயிரத்து 500 கோழிகள் இருந்தது. மொத்தம் 9 ஆயிரம் கோழிகள் வளர்த்து வந்தார். அவைகள் அனைத்தும் கறிக் கோழியாகும்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் மாலை சுமார் 3 மணி அளவில் அப்பகுதியில் பயங்கர சூறாவளி காற்று வீசியது. இதில் ரோட்டு ஓரத்தில் உள்ள மரங்களில் இருந்து கிளைகள் ஒடிந்து விழுந்தது. மின்கம்பிகள் ஒன்றோட்டு ஒன்றாக உரசியது.

இதனால் தீப்பொறி ஏற்பட்டது. இதில் காற் றுக்கு தீப்பொறி கோழிப்பண்ணை கூரையில் பட்ட உடனே கூரையில் தீ மளமளவென பிடிக்கத் தொடங்கியது. பலத்த காற்று வீசியதால் தீ கொளுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

உடனே அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் பக்கத்து தோட்டத்தில் இருந்து கிணற்று நீரை எடுத்து ஊற்றி தீயை அணைக்க முயன்றனர். அவர்களால் தீயை அணைக்கமுடியவில்லை.(6)

## புத்தக வடிவில் வெளிவரும் ஏ.ஆர்.ரஹ்மானின் வாழ்க்கை வரலாறு



ஒஸ்கார்விருது வென்ற இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் இசைப்புயல் எனும் பெயரில் இந்த வாழ்க்கை வரலாற்று நூல் வெளியாக உள்ளது. சென் னையைச் சேர்ந்த பத்திரி கையாளரான காமினி மத்தாஸ் இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளர்.

இந்தப் புத்தகத்தில் மறைந்த ரஹ்மானின தந்தை, ரஹ்மான் இளம் பருவத்தில் இசை பயின்ற விதம், மதம் மாறியது ஆகிய விஷயங் கள் குறித்து விரிவாக விபரிக்கப்பட்டுள்ளது. ரஹ்மான் முதல்முறையாக இசையமைத்தது உட்பட அவரது இசைப் பயணமும் இந்த நூலில விரிவாக எழுதப்பட்டுள்ளது. ஏ.ஆர். ரஹ்மான் தொடர்பாக வெளியாகும் முதல் அதிகாரபூர்வ வாழ்க்கை வரலாற்று நூலாக இது கருதப்படுகின றது. பெண்குவின் பதிப்பகம் இதனை வெளியி டுகிறது. (6)

## இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு இந்தியாவும் ஐ.நா சபையும் இணைந்து நிரந்தர தீர்வு காணவேண்டும்-ம.தி.மு.க தீர்மானம்

சேலம் மாவட்ட ம.தி.மு.க செயற்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் அண்ணாபுரத்தில் உள்ள கட்சியின் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக்கூட்டத்தில் இலங்கை தமிழர்கள் நல்வாழ்வுக்காக இந்திய அரசும் ஐ.நா.சபையும் இணைந்து தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண நடவடிக்கை எடுத்து இலங்கை தமிழர்களை காப்பாற்ற வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (6)

# டியானன்மென் சதுக்கத்தில் பலியானோர் தொகையை வெளியிடுமாறு அமெ.விடுத்த கோரிக்கைக்கு சீனா எதிர்ப்பு

(பீஜிங்)

சீனாவில், 20 ஆண்டுகளுக்கு முன், டியானன்மென் சதுக்கத்தில், ஜனநாயகத் திற்கு ஆதரவாக நடந்த போராட்டத்தில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கையை வெளி யிட வேண்டும் என்ற அமெரிக்காவின் கோரிக் கைக்கு அந்நாட்டு அரசு எதிர்ப்பு தெரிவித் துள்ளது.

சீனாவில் கடந்த 1989 ஆம் ஆண்டு ஜுன் 4 ஆம் திகதி, டியானன்மென் சதுக்கத்தில், ஜனநாயகத்திற்கு ஆதரவானவர்கள் வாரக் கணக்கில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர் கள் மீது அரசு தாக்குதல் நடத்தி போராட்டத்தை ஒடுக்கியது.இதில் உயிரிழந்தவர்கள் எண் ணிக்கை குறித்து ஆளும் கம்யூனிஸ்ட் அரசு வெளியிடவில்லை.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் ஹலாரி கிளிண்டன் கடந்த புதன்கிழமை கூறுகையில், டியானன்மென் சதுக்கத்தில் நடந்த போராட்டத்தில் உயிரிழந் தவர்களின் எண்ணிக்கையை வெளியிட வேண்டும். அந்தப் போரட்டத்தின் போது கைது செய்யப்பட்டு தற்போதும் சிறையில இருப்பவர்களை சீன அரசு விடுதலைசெய்ய வேண்டும்.

பேராட்டத்தில் பங்கேற்றவர்களை துன புறுத்துவதை நிறுத்தவேண்டும் என்றார். இது குறித்து சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் குயின் காங்க் கூறிய தாவது,ஹிலாரியின் கருத்து, சீனாவின் உள் நாட்டு விவகாரத்தில் பண்பற்ற முறையில் அனாவசியமாக தலையிடுவதை எடுத்துக காட்டுகிறது.

உண்மைகளைப் புறக்கணித்து, சீன அரசுக்கு எதிராக ஆதாரமற்ற குற்றச்சாட்டு களை வெளியிட்டுள்ளது அமெரிக்கா.இதை எதிர்க்கிறோம். அமெரிக்கா தனது தவறான அபிப்பிராயங்களை திருத்திக் கொள்வதே நல்லது.அப்போது தான் சீன மற்றும் அமெ ரிக்கா இடையேயான நல்லுறவு பாதிக்கப்படா மல் தடுக்கமுடியும்.இவ்வாறு குயின் காங்க் கூறினார். ஆனாலும் அப் போராட்டத்தில் உயிரிழந்தவர் எண்ணிக்கையை தெரிவிக்க மறுத்துவிட்டார். (6)




அன்புளநீர் அகமெல்லாம் பொங்கப் பொங்க அறமெழுந்து பெருஞ்சேவை ஆற்றஆற்றத் தொண்டு செயப்பல அன்பர் தோன்றத் தோன்ற தோற்றுசுவைச் சோறாக உண்ண உண்ணக் கண்டுவரும் அடியார்கள் ஆர்ப்ப ஆர்ப்ப கடி அமுதசுரபியினால் ஊட்ட ஊட்டக் கொண்டு பசி தீர்த்தவர்கள் கோடி கோடி கோடானு காலமெல்லாம் வாழிவாழி

நயினாதீவு- ஸ்ரீ நாகபூஷணி

அமுதசுரபி அன்னதான சபை

Reg.No.S.236

பொன்விழா 2009 ஆரம்பம் -1960 (வரைவுள்ளது) பொன்விழா 2009

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருளினால் 1960 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப் பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை "அமுதசுரபி" என்னும் பெயர் தாங்கிய மணிமண்டபத்தின் கண்ணே ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான அடியார் களுக்கு சிறந்த முறையில் அன்னதானத் தொண்டினைச் செய்து வருகின்றது. இவ்வாண்டுடன் 50 ஆவது ஆண்டில் பிரவேசிப்பதில் மனமகிழ்வெய்துகிறோம்.

அம்பாளின் திருப்பதியிலே நடைபெறும் இத்தொண்டு சிறந்த சேவையென கருதி தருமசீலர் களாகிய வர்த்தகப் பெருமக்கள், விவசாயப் பெருமக்கள், தொழிலாளப் பெருமக்கள் மற்றும் அம்பிகை அடியார்கள் அன்பர்கள் அனைவரும் மனமுவந்து பணம் பொருள் உதவிசெய்து வருவதுடன் ஆக்கமும் ஊக்கமும் தந்து அன்னதான சபையின் சேவையைப் பாராட்டியும் வருகின்றனர்.

அம்பாளின் திருவருளால் பணிக்கப்பெற்ற இச்சேவையைச் சிறந்த முறையில் செய்து அல்லும் பகலும் அயராது உழைக்கின்ற சபை நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும், நற்சேவைத் தொண்டர்களுக்கும், அமுதசுரபி மண்டபத்திற்கு வந்து பணி செய்யும் அடியார்களுக்கும், தத்தம் கடமைகளைத் திறமையாகச் செய்த, செய்கின்ற சேவையாளர்களுக்கும் அன்னதானத் தொண் டினை நேரடியாகக் கண்டும், கேட்டும் ஆசியுரை வழங்கிய அன்பர்களுக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டாண்டு தோறும் அன்னதானம் சிறப்பாக நடைபெறப் பணம் பொருள் முதலியவற்றை மனமுவந்து உதவிவரும் தரும சீலர்களுக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் திருவருள் கிடைக்கும் வண்ணம் பிரார்த்தித்துச் சபையின் மனமுவந்த, பணிவார்ந்த வணக்கத்தை தெரிவித்துக்கொள் கின்றோம்.

இவ்வாண்டு ஆனிமாதம் 9 ஆம் நாள் (23.06.2009) செவ்வாய்க்கிழமை அம்பிகையின் உயர்திரு விழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆனிமாதம் 18 ஆம்நாள் (02.07.2009) வியாழக்கிழமை திருமஞ்சத் திருவிழாவும் மறுநாள் (03.07.2009) பூந்தண்டிகைத் திருவிழாவும் ஆனிமாதம் 21 ஆம்நாள் (05.07.2009) சப்பறத் திருவிழாவும் ஆனி மாதம் 22 ஆம் நாள் (06.07.2009) திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆனி 23 ஆம் நாள் (07.07.2009) செவ்வாய்க்கிழமை பூரணைத் தினத்தன்று தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்று ஆனி மாதம் 24 ஆம் நாள் (08.07.2009) புதன்கிழமை தெப்பத்திருவிழாவுடன் நிறைவுபெறத் திருவருள் பாலித்துள்ளது. அம்பிகையைத் தரிசிக்க வரும் அடியார்களுக்குச் சிறந்த முறையில் 16 நாட்களும் இரவு,பகல் அன்னதானம் வழங்கச் சபை தீர்மானம் செய்துள்ளது. எனவே தருமகொடை வள்ளல்களான உங்களிடம் எமது சபையால் நியமிக்கப்பெற்ற உத்தமத் தொண்டர்கள் வருவார்கள்.அவர்களிடம் நீங்கள் வழங்கும் பணம், பொருள் முதலியவற்றைக் கையளித்து சபையின் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள் கின்றோம்.

இவ்வாண்டு 50ஆவது ஆண்டு நிறைவை பொன்விழாவாகக் கொண்டாட உள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம்

நேரடியாகப் பணம் கொடுக்க விரும்புவோர் Amuthasurabhi Commercial Bank கண. இல. 1247985001 Peoples Parkகட்டிடம் Pettah,B.O.C க/கு இல. 7687836 ஊர்காவற்றுறை கிளை வேலணை என்னும் விலாசத்திற்கு அனுப்பும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அம்பிகையின் திருப்பதியிலே அடியார்கள் தங்கி நின்று தரிசிப்பதற்காக நவீன வசதிகளுடன் கூடிய அமுதசுரபி அன்னபூரணி இறைபயணிகள் இல்லமும் திறந்து வைக்கப்பட்டுள்ளதென்பதை மனமகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.

தொலைபேசி இல.0602213575

கு.சாந்தலிங்கம்-செயலாளர்
அமுதசுரபி மண்டபம்
நயினாதீவு-02

(C/2535)



Hatton National Bank

Hatton National Bank plc (PQ82)

அடகுப்பொருட்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய் ஆகிய கிளைகளில் 10.04.2008 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக் கையாளரின் அடகுநகைகள் 13.06.2009 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இல.212, 214, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ்.கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்கள் பெறுமதி மிக்க பொருட்களை உடனே மீட்க முடியாவிட்டால்...

- கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூபா.500) செலுத்தி

*அல்லது*

- தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருட்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.

ஏலவிற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

ஹற்றன் நஷனல் வங்கி

(C/2538)

8-VI

# இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

களைகளுள் குறிப்பாக வெளிநாட்டிலிருந்து வந்தேறிய களைகள் எமது நாட்டில் பல்கிப் பெருகி தலையிடியாக மாறியிருப்பதற்கு பல உதாரணங்களுண்டு. இவற்றுள் அழகுக்கென கொண்டு வரப்பட்டு அதனை அலட்சியம் செய்ததனால் இன்று அனைத்து இடங்களிலும் வளர்ந்து இனம் பெருக்கி நிற்கின்றது. அவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம்.

**நாயுண்ணி - அழ்கு தாவரம் அனாவசிய களையானது**

எங்கு பார்த்தாலும் விதம் விதமான நிறங்களில் ஓங்கி வளர்ந்திருக்கும் நாயுண்ணி (Lantana camera) எனும் தாவரத்தைக் காணலாம். வீடுகளில் பூச்சாடிகளில் வைத்து அழகை அனுபவிப்பதற்காக நம்மவர்கள் சிலரால் வெளிநாட்டிலிருந்த தெரிந்தெடுத்து கொண்டு வரப்பட்டது இது.

ஆரம்பத்தில் அதன் அழகை விதம் விதமான பூக்களுடன் இருந்த போது இரசித்தவர்களின் இரசனை மாறிவிட்டதோ என்னவோ அது பூச்சாடியிலிருந்து இறங்கி வீடுகள், காணிகள் என பல இடங்களிலும் பல்கிப் பெருகிவிட்டது. இதனது பழங்கள் "நாயுண்ணி" போலத் தோற்றமளிப்பதனால் இதற்கு தமிழில் நாயுண்ணி தாவரமென பெயர் வைத்து விட்டார்கள்.

நாயுண்ணியும் எங்கிருந்தோ நாயில் தொற்றி ஒட்டுண்ணியாகி நாயிலிருந்து குருதியைக் குடித்து இனம் பெருக்கும். அது போல நாயுண்ணி தாவரமும் அழகுக்கென வந்து ஒட்டுண்ணியாக எம்மூரிலே இனம் பெருக்கி விட்டது.

அதிலே பூஞ்சண எதிர்ப்பு, நெமற்றோட்டு எதிர்ப்பு சக்தி இருப்பதாயும் யூரியா போன்ற அசேதன இரசாயன பசளைகளின் நைதரேற்று இழக்கப்படும் வீதத்தை குறைக்க பயன்படும் என உள்ளூரிலும் வெளியூரிலும் ஆராய்ச்சியிலாளர்கள் ஆய்வில் முடிவெடுத்தாலும் நாயுண்ணியின் சிறிதளவிலான பயன்பாடு என்பதற்கு மேல் அது ஒரு தலையிடிக்குரிய களையாகவே கருதப்படவேண்டும்.

இங்குஒருவிடயத்தை கவனத்திற்கொள்ள வேண்டும். இது ஒரு நல்ல படிப்பினையும் கூட. எங்களூரில் உள்ள வளங்களை, சூழலின் பன்முகத்தன்மைக்குட்பட்ட தாவர இனங்களின் பயன்பாட்டினை இனங்கண்டு அவற்றினை சிறந்த முறையில் உச்சபயனை பெறுவதற்காக பயன்படுத்தும் அதே வேளையில் வெளிநாடுகளிலிருந்து தேவையற்ற நோக்கத்திற்காக எம்மூருக்கு கொண்டு வருவதிலும் அதிக கவனம் எடுத்தல் வேண்டும்.

எமது மண், சூழல், சுவாத்தியம் கொண்டு வரும் இவ்வாறான தாவரங்களுக்கு ஏற்புடையதாக மாறும் போது ஒரு வகையில் பல்கிப் பெருகுவதுடன் இன்னொரு வகையில்




இங்குள்ள உள்ளூர் தாவரங்களுடன் போட்டியிட்டு தனது ஆதிக்கத்தை செலுத்தத் தொடங்கி விடும்.

தன்கையே தனக்குதவி என்பது போல எங்களது நாட்டுக்குரியவற்றை அபிவிருத்தி செய்வதில் எமது கவனத்தைச் செலுத்த வேண்டும். களைகள் வெளியிடங்களிலிருந்து உள்வரும் போது அவற்றை மிக நுணுக்கமாக அவதானித்து ஆரம்பத்திலேயே களைந்து விட வேண்டும்.

நாயுண்ணி போல இன்னுமொரு களை உணவுக்கென கொண்டு வரப்பட்ட ஆடுகளின் எச்சங்களிலிருந்து பெருகி இப்போது எங்கும் பரந்து வியாபித்திருக்கின்றது. எது அது? என ஊகிக்க முடிகின்றதா?

> பாதீனியம் எங்கெல்லாம் பரவுகின்றதோ அங்கெல்லாம் களையெடுப்பு அவசியம் மேற்கொள்ள வேண்டும். கவனிக்காது விட்டால் பாதீனியத்தால் மிகவும் கவலைப்பட வேண்டிவரும்.

**பாதீனியம்**

அது தான் பாதீனியம்! பொதுவாக அனைத்து இடங்களிலும் பல்கிப் பெருகிக் கொண்டிருக்கின்றது. வேண்டா வெறுப்பாக வந்தேறிய களை இது. நிறைந்தளவில் அதிகமான வித்துக்களை உற்பத்தி செய்யும் திறன் கொண்டதால் இது நீரோட்டத்தில் மிதந்து இலகுவாக பரவக்கூடியதாக இருக்கின்றது. இத்தாவரத்திலுள்ள மயிர்களும் அதிலுள்ள சுரப்புக்களும் மனிதருக்கு சொறி, எரிவு போன்றவற்றை ஏற்படுத்தக் காரணமாயிருக்கின்றன.

பாதீனியம் அஸ்ரரேசியே (Asteraceae) குடும்பத்தைச் சேர்ந்த பயிராகும். இக்குடும்பத்தை சேர்ந்த பயிர்களில் சூரியகாந்தி சிறந்த தாவர எண்ணெய் பெறுவதற்காக பயிரிடப்படுவதும், இலைக்கறி வகையான லெற்றூஸ் இலைக்கறி அழகுபடுத்தலுக்கும் பயன்படுகின்றன. இவ்வகை குடும்பப் பயிர்களுள் களையாக மூக்குத்திப் பூண்டு இருந்தாலும் இது ஒரு சிறந்த மூலிகை என்பார் சுதேச வைத்தியர்கள்.

**பாதீனியம் - கட்டுப்பாடு**

எமது நாட்டில் பாதீனிய களை பரவிய வேகம் விசித்திரமானது. குறிப்பாக வடபகுதியை முழுமையாகவே ஆக்கிரமித்துள்ள இக்களையை அந்தந்த இடத்திலுள்ள, வயல்களுக்கு சொந்தமான மக்கள் ஒன்றிணைவதன் மூலமாகவே இக்களையை விரட்டிட முடியும்.

இக்களையை அழிக்காது விட்டால் அரச குற்றமாகி தண்டப்பணமும் அறிவித்திருக்கும் நிலையிலும் எமது மக்கள் அது பற்றி சிறிதேனும் கவலை கொண்டதாக தெரியவில்லை.

அங்கு இங்கு என பரவிய பாதீனியம் 'நிஷா' வெள்ள பெருக்கத்தை சார்பாகப் பயன்படுத்திக் கொண்டதால் யாழ். குடா நாட்டின்மிச்ச சொச்ச பகுதிகளுக்கும் பரந்து பரவிவிட்டது. நிறுவன ரீதியான செயற்பாடுகள் சரியான திட்டமிடல் இருந்தால் மட்டுமே இவ்வகை களைகளை அழித்தொழிப்பது சாத்தியமாகும்.

ஒவ்வொருமுறையும் யாழ்ப்பாணத்து பத்திரிகைகள் படத்துடன் பாதீனிய களை பரம்பலை எடுத்துக் கூறும் போது அதை வெறுமனே செய்தியாக செவிமடுக்கும் எம்மவர்கள் ஒரு கணம் கூட்டாக இணைந்து யோசித்தால் சிறப்பாக இக் களையை கட்டுப்படுத்துவதில் ஆக்கபூர்வமான செயலை செய்ய முடியும்.

ஏனோ தானோ என்ற நிலையிலிருந்து மாறி இது எங்களது பிரச்சனை என அணுகும் நிலை வரவேண்டும். இளைஞர் கழகங்கள், விவசாய சம்மேளனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், பாடசாலை சங்கங்கள், வர்த்தக சங்கங்கள் என அனைவரும் ஒன்றிணைந்து பாதீனியம் எங்கெல்லாம் பரவுகின்றதோ அங்கெல்லாம் களையெடுப்பு அவசியம் மேற்கொள்ள வேண்டும். கவனிக்காது விட்டால் பாதீனியத்தால் மிகவும் கவலைப்பட வேண்டிவரும்.



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

மாற்றம் ஒன்றை செய்திட விவேகானந்தர் அழைத்தது 100 இளைஞர்களை. அதுபோல் எத்தனை இளைஞர்கள் நம்மிடையே இருக்கின்றார்கள். தேசிய பிரச்சினையாக இனங்காணப்பட்ட பாதீனிய களையை கட்டுப்படுத்த,முழுவதுமாக இல்லாதொழிக்க இங்கொரு விவேகானந்தர் பிறந்திட வேண்டும். அவருடன் அந்த 100 பேரும் இணைந்து அந்நிய களையை களைத்திட கைகொடுத்திட வேண்டும்.

விஞ்ஞானம் எப்படித்தான் வளர்ந்தாலும் அதனை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டும். இங்கோர் களையெடுப்பிற்கு விஞ்ஞானத்தின் உதவி பெரிதாக இன்னும் பயன்படவில்லை. உயிரியல் முறைக் கட்டுப்பாடு ஒன்றே மாற்றீடாக பரிந்துரைக்கக்கூடிய நிலையில் அவற்றின் நிலை இன்னும் சரியாக இனங்காண முடியவில்லை. அதனால் பரந்துபட்ட அளவில் பாதீனிய களையை கட்டுப்படுத்த முடியவில்லை.

இதனை கட்டுப்படுத்த சமூகப் பொறுப்புணர்வுள்ள இளைஞர், மாணவர் சமூகம் முன்வரவேண்டும். இன்னொரு பசுமைப் புரட்சியில் வேளாண் செய்கையில் சுமையாக இருக்கும் இத்தகைய களைகளை முழுமையாக களைந்திட அனைவரும் ஒன்றிணைதல் வேண்டும். உணவு உற்பத்தி மட்டும் பசுமைப் புரட்சியின் தனித்த குறிக்கோளாக இல்லாது உணவு உற்பத்திக்கும் சுகாதாரத்திற்கும் இடையூறான தடைகளை, இவ்வாறான களைகளை, அழித்தொழிப்பதும் அவசியமானதாக்கப்பட வேண்டும். (தொடரும்)

# இடம்பெயர்ந்து வெவ்வேறு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளோரை மீள இணைக்கும் நடவடிக்கை ஆரம்பம்

## அமைச்சர் அநுரபிரியதர்சன யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

இடம்பெயரும் போது பிரிந்து வெவ்வேறு நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களை மீள இணைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாக ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

இதற்கு ஏதுவாக வவுனியாவிலுள்ள 26 முகாம்களில் தங்கியிருக்கும் 2 இலட்சத்து 72 ஆயிரம் பேரின் விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் முதலாம் திகதி ஆரம்பமான இந்தக் கணக்கெடுக்கும் பணிகள் எதிர்வரும் சில தினங்கள் தொடரும் எனவும் ஊடகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்தவர்களில் 50 வீதமான குடும்பங்கள் இணைக்கப்பட்டு விட்டதாகக் குறிப்பிட்ட அமைச்சர் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் அதிகார அமைச்சு, தேசநிர்மாண அமைச்சு, விளையாட்டுத்துறை அமைச்சு, இளைஞர் வலு அமைச்சு, சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரித்துறை அமைச்சு ஆகிய அமைச்சுக்கள் வவுனியாவிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான உதவிகளைச் செய்து வருவதாகத் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்குச் சிகிச்சையளிப்பதற்காக மேலதிகமான மருத்துவ வசதிகளுடன் கூடிய 15 வைத்தியசாலைகளை ஒதுக்கியிருப்பதாகவும் முகாம்களிலுள்ள சிறுவர்களைப் பராமரிப்பதற்கு மாத்திரம் 1.8 பில்லியன் ரூபாவை ஒதுக்கியிருப்பதாகவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

மன உளைச்சலுக்குள்ளான மக்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு நாம் மனநல வைத்தியர்களையும் அனுப்பி உளவளச் சிகிச்சையளிக்கவுள்ளோம் என்றார்.

இதேவேளை, இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ள 500 அநாதைச் சிறுவர்களுக்கும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரித்துறை அமைச்சு விசேட செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. இவர்களில் சிலர் முல்லைத்தீவு அநாதை இல்லத்திலிருந்து வந்தவர்கள் எனவும் கூறப்படுகிறது.

இந்தச் சிறுவர்களுக்கும் தமது அமைச்சு வேண்டிய உதவிகளைச் செய்து கொடுக்கும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலன்புரித்துறை பிரதி அமைச்சர் லயனர் பிரேமசிறி தெரிவித்தார்.

அநாதைச் சிறுவர்களை சர்வதேச அமைப்புக்கள் பராமரிப்பது குறித்துத்தான் மகிழச்சியடையவில்லையெனக் குறிப்பிட்ட அமைச்சர் எனவே தமது அமைச்சின் கீழ் விசேட செயற்திட்டமொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்திருப்பதாகக் கூறினார்.

அதேநேரம் நலன்புரி முகாம்களிலுள்ளவர்களில் மாற்றுவலுவுடைய 5 வீதமானவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இந்த எண்ணிக்கை அதிகமானது அல்லவெனவும் அமைச்சர் தெரிவித்தார். (6)

## பிரார்த்தனை நிகழ்வு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் பிரார்த்தனை நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது.

இடம்பெயர்ந்தும் ஏனைய பல வழிகளி லும் இன்னலுறும் மக்களின் விமோசனத் திற்காக ஆண்டவன் அருள் வேண்டி கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் தலைவர் சுவாமிஜி சர்வரூபானந்தா 'மகராஜ் தலைமையில் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் போது யாழ்ப்பாணத்தி லுள்ள நலன்புரி முகாம்களுக்கு விஜயம் செய்த சுவாமிஜி சர்வரூபானந்தா மகராஜும் வவுனியாவிலுள்ள நலன்புரி முகாம்களுக்கு சமூக சேவை மற்றும் சமூக நலத்துறை அமைச்சரின் அனுசரணையுடன் விஜயம் செய்த மாமன்ற சமூக நலன் குழுவினரும் இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளை எடுத்துரைத்தார்கள். அனைத்து இந்து மக்களையும் இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் படி அகில இலங்கை இந்து மாமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது. (6)

# கடந்த ஐந்து மாதங்களில் டெங்குக் காய்ச்சலால் 90 பேர் உயிரிழப்பு - சுகாதார அமைச்சு தகவல்

இவ்வருட ஜனவரி முதலாம் திகதி முதல் ஜுன் மாதம் இரண்டாம் திகதி வரையும் டெங்கு காய்ச்சல் காரணமாக 90 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறிப்பிட்ட காலப் பகுதியில் 7 ஆயிரத்து 110 பேர் இக்காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத் துறை அமைச்சின் பொது சுகாதாரத் துறையின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார்.

டெங்கு காய்ச்சல் தீவிரமாகப் பரவும் பிரதேசங்களாக 68 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் இனம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பராமரிப்பு, போஷாக்குத்துறை அமைச்சு தெரிவிக்கின்றது.

கண்டி, கொழும்பு, களுத்துறை, குருணாகல், கேகாலை, கம்பஹா, திருமலை, மட்டக்களப்பு, ஹம்பாந்தோட்டை, மாத்தறை ஆகிய மாவட்டங்களிலுள்ள 68 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளே டெங்கு காய்ச்சல் தீவிரமாகப் பரவும் பிரதேசங்களாக இனம் காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

ஓநாய்க்கு கருணை காட்டுவது –ஆட்டுக்குட்டிக்கு கொடுமை செய்வதாகும்.

– ஆப்கானிஸ்தான்

வலம்புரி

# கதைத்துக் கதைத்தே காலம் போகிறது!

இலங்கையில் நடந்த யுத்தம் குறித்து விசாரணை நடத்தவேண்டும். யுத்தம் முடிந்த பின்பும் மனித உரிமைமீறல் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

இலங்கையில் நடந்தது போர்க் குற்றம் இவ்வாறு பலரும் விமர்சனம் செய்தவண்ணமுள்ளனர்.

ஆனால் எவரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ளவில்லை. மாறாக கதைத்துக் கதைத்துக் காலம் கடத்தும் நாடகமே நடக்கின்றது.

இழந்தது இழந்ததாக, முகாமில் அடைபட்டவர் அடைபட்டவராக இருப்பதைத் தவிர வேறு எந்தவிதமான முன்னேற்றங்களும் இல்லை.

இலங்கையில் நடந்த யுத்தம் தொடர்பில் விளக்கம், விசாரணை நடத்தவேண்டுமென ஐ.நா. கூறுகிறது.

ஐ.நா. யாருக்குக் கூறுகின்றதென்பதே இப்போதைய கேள்வியாக இருக்கின்றது. இலங்கையில் போர்க்குற்றம் நடந்துள்ளதாயின் விசாரணை நடத்தவேண்டிய பொறுப்பு யாருடையது?

விசாரணையை நடத்தவேண்டியவரே கருத்துக் கூறுபவராக மாறினால் விசாரணை நடக்குமா என்ன?எல்லாமே காலம் கடத்தும் தந்திரமாகும்.

விசாரணைகள் விளக்கங்கள் எதுவும் நடக்கப்போவதில்லை என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும்.

தமிழ் மக்கள் ஐ.நா. போன்ற அமைப்புக்களை நம்பவில்லை. சர்வதேச சமூகத்தை நம்பவில்லை. அந்த நம்பிக்கைகள் பல வருடங்கள் நீடித்தது உண்மைதான்.

ஆனால் வன்னியில் நடந்த யுத்தத்தில் அப்பாவி மக்கள் குடும்பம் குடும்பமாக கொல்லப்பட்ட சோகம், இவற்றின் மத்தியில் சர்வதேச சமூகம் எமக்கு உதவும் என்ற நினைப்பு முற்றாக இல்லாது போய்விட்டது.

அப்படியானால் இதெல்லாம் எதற்காக எழுதுகிறீர்கள் என்று யாரேனும் கேட்கலாம்.

அந்தக் கேள்வியில் தான் தமிழ் மக்களின் உள்ளார்ந்தமான ஆதங்கம் வெளிப்படும். இத்தனை ஆண்டுகள் நீடித்த இன்னல்கள், இழந்த உயிர்கள், அழிந்த சொத்துக்கள், பறிபோன எங்கள் வாழ்விடங்கள் எல்லாம் வீணாகிப்போய் விட்டதே. எல்லாம் வெறுமையாகிப் போனதே.

இழந்தவை அர்த்தமற்றவையாகிவிடுமோ என்ற ஏக்கமே அது.

அந்த ஏக்கம் ஏக்கமாக இருந்துவிடக் கூடாதென்பது இறைபிரார்த்தனை. இதனை விட எதைத்தான் செய்ய முடியும்!

# சிங்களவர்கள் தமிழ் மொழியை கற்பதன் மூலம் இலங்கையின் அடிப்படைப் பிரச்சினையை தீர்க்கலாம்

## அமைச்சர் மிலிந்த மொரகொட தெரிவிப்பு

(கொழும்பு)

சிங்களவர்கள் தமிழ் மொழியை கற்பதன் மூலமும் தமிழர்களுடைய கலை, கலாசார விழுமியங்களை மதித்து அம் மக்களுடன் சுமூகமான முறையில் உறவைப் பேணுவதன் மூலமும் இலங்கையின் அடிப்படை பிரச்சினையை முற்றாகத் தீர்க்கலாம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் மிலிந்த மொர கொட தெரிவித்தார்.

மொழி என்பது கருத்துக்களை பரிமாறிக் கொள்ளும் ஒரு ஊடகமாகும். எனவே மொழி அறிவு என்பது எமக்கு இன்றியமையாத ஒன்றாகும். ஆகையால் தமிழ் மக்கள் சிங்கள மொழியையும் சிங்களவர்கள் தமிழ் மொழியையும் கற்பதன் மூலம் இரு இனங்களுக்கிடையிலான உறவு நெருக்கமாகும். அதன் மூலம் சமூகத்தில் சமாதானம் நிறைந்த ஒரு சூழல் உருவாகும் எனவும் அவர் கூறினார்.

மிலிந்த மொரகொட நிலையம் இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் இணைந்து நடத்திய 6 மாத தமிழ் மொழி பயிற்சி நெறிகளை முடித்துக் கொண்ட 54 பொலிஸ் அதிகாரிகளுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் வைபவம் கடந்த திங்கட்கிழமை கொழும்பு பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ் வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (6)

# வவுனியா நிவாரணக் கிராமங்களில் 6 வெளிநாட்டு பிரஜைகளும் தங்கியுள்ளனர்

## அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை யுத்த வலயத்திலிருந்து இடம்பெயர்ந்து நிவாரண கிராமங்களில் தங்கியுள்ள பொதுமக்களுடன் ஆறு வெளிநாட்டு பிரஜைகளும் சிக்கியுள்ளதாக அரசாங்கம் கண்டறிந்துள்ளது.

மூன்று அவுஸ்திரேலியர்களும், பிரிட்டன், நெதர்லாந்து மற்றும் நோர்வே நாடுகளைச் சேர்ந்த தலா ஒருவருமாக ஆறு பிரஜைகள் இவ்வாறு நிவாரணக் கிராமங்களில் தங்கியுள்ளனர்.

இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட ஆறு வெளிநாட்டுப் பிரஜைகளே இவ்வாறு சிக்கியுள்ளதாக தெரிவித்த மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க, இவர்கள் விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைப் பேணினார்களா என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

வவுனியா நிவாரண கிராமங் களில் தங்கியுள்ள பிரித்தானிய பிரஜையான ஞானகுமார் வீசா வழங்கப்பட்ட ஆறு மாத கால த்தை விட அதிகமாக இலங்கையில் தங்கியிருப்பதாக இலங்கை குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஞானகுமார் வீசா காலத்தை தாண்டி இலங்கையில் தங்கியி ருந்ததன் மூலம் இந்நாட்டு குடிவரவுச் சட்டங்களை உதாசீனம் செய்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஏனைய ஐந்து வெளிநாட்டு பிரஜைகளின் நிலமை தொடர்பிலும் குடிவரவு குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகளால் விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (6)

# வடக்கின் வசந்தம் விசேட தொழில்நுட்ப பயிற்சிக்கு பதிவு செய்தவர்களுக்கு இலவச சிம் அட்டை

(யாழ்ப்பாணம்)

வடக்கில் வசந்தம் விசேட தொழில்நுட்ப பயிற்சி வகுப்புகளுக்கு பதிவு செய்த மாணவர்கள் அனைவருக்கும் டயலொக் சிம் அட்டை இலவசமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தொழில்நுட்பக் கல்லூரி அதிபரும் மாகாணப் பணிப்பாளருமான கலாநிதி ந.யோகராஜன் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் நன்மை கருதி வடக்கில் வசந்தம் தொழில் பயிற்சிக்காக தம்மை பதிவு செய்த மாணவர்கள் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் வைத்து இலவசமாக டயலொக் சிம் அட்டையை மாணவர்கள் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அடையாள அட்டையின் போட்டோ பிரதியும் இலவசமாக செய்து தர ஏற்பாடாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேவையாயின் Vodo phone 2 ஆயிரத்து 700 ரூபாவுக்கு வழங்க ஏற்பாடகி உள்ளதாகவும் 600 ரூபாவுக்கு இலவசமாக மீள் நிரப்புதல் செய்து கொடுக்கப்படும் எனவும் இவ்வாய்ப்பை வடக்கில் வசந்தம் திட்டத்தின் கீழ் தம்மை பதிவு செய்த மாணவர்கள் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (6-30)

# பயிற்சிக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் தீவகப் பிரதேச இந்து அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு இன்று காலை 9.30 மணிக்கு வேலணை சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச செயலாளர் எம். நந்தகோபாலன் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள கணக்காளர் ஜி. காண்டீபன் கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் "இந்து சமய மெய்யியல்" என்னும் விடயம் பற்றி ஆசிரியர் எஸ். செல்வமனோகரனும் "இந்து சமய இலக்கியம்" என்னும் விடயம் பற்றி ஆசிரிய ஆலோசகர் புகன் ஸ்ரீந்திரனும், "இந்து சமய வரலாறு" என்னும் விடயம் பற்றி பி. சந்திரவேலும், "இந்துசமய வாழ்வியல்" என்னும் விடயம் பற்றி உளவளத் துணையாளர் ந. நவராஜும் விரிவுரையாற்றவுள்ளார். (6-4)

# "தொன்மைமிகு தொல்புரத்தாளே தேரேறி வருக"

### இன்று கொட்டடியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் தேர்த்திருவிழா



தொல்புரம் தனிலமர்ந்து தொல்லைகள்
தீர்ப்பவளே தேரேறிவருக
தோத்திரம் செய்து நின்றோம் தாயே
தேரேறி வருக
கொட்டியம்பதியிலே கொட்டியருள்
தந்திடவே தேரேறி வருக
கல்லை யொத்த மன்மும் கசிந்துருக
தேரேறி வருக
காசினியில் கண்கண்ட தெய்வம் மாரியே
தேரேறி வருக

தொல்புரத்தூர் க. லோகேஸ்வரன்

# அளவையில் கும்பளாவளைத் தேர் இன்று



திக்கெட்டும் தேவர் கூடி
திருவாய் மலர்ந்து போற்ற
முக்கண்ணன் தேவி யோடு
மூவரும் சூழ்ந்து கொள்ள
பக்கத்தில் முருகன் வந்து
பாசத்தோடு அரவணைக்க
அக்கினிப் பிழம்பை ஒத்த
ஐங்கரன் தேரில் ஏற
மக்களின் வெள்ளம் சூழ
மாமணித் தேரசைய
இக் கயிலைக் காட்சி கண்டோர்
இறையடி சேர்வரன்றோ?

விகடகவி


# சுவாமி விவேகானந்தரின் வீரமுரசு

## தியாகம்



புகழை யார் பொருட்படுத்துவது? அதனை விட்டொழி! பசித்த வாய்க்கு உணவுக் கவளங்களை எடுத்துச் செல்லும் முயற்சியில் புகழும் உடமையும் அனைத்தும் அழிவதனாலும் மும்மடங்கு பேறு பெற்றவன் ஆவாய். வெல்வது அன்பே, அன்பு ஒன்றே ; அறிவல்ல. நூலும் அறிவும், யோகமும் தியானமும், ஆன்மீக ஒளியும் – அன்போடு ஒப்பிடும் போது அனைத்தும் மண்ணாகும்.

இந்தியா வேண்டி நிற்பது ஆயிரம் இளைஞர்களாவது செய்யும் தியாகத்தையே – ஆண்களே ; விலங்குகளல்ல செல்வந்தர்களை வழிபடத் தொடங்கும் நாள் முதலே ஒரு சமயத்தின் கேடு ஆரம்பிக்கிறது. இன்றியமையாதது துறவே துறவின்றி யாரும் தனது அன்பு முழுதையும் பிறருக்காக உழைக்கும் முயற்சியில் பாய்ச்சி விட முடியாது.




தில்லையம்பதியாள் துணை

# சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி

# திருவருள்மிகு சிவகாமி அம்பாள் திருக்கோயில்

# இரதோற்சவ விழா சிறப்பு மலர் 06.06.2009



## திருக்கோயில் பிரதம குருவின் ஆசியுரை



மஹோற்சவத்தின் பெருமை பஞ்ச கிருத்தியம் என்று சொல்லப்படுகின்ற படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற வகையிலே இறைவனுடைய பஞ்ச கிருத்தியங்களை குறிக்கின்ற விழாவாகவும் மஹோற்சவம் விளங்குகின்றது. இவ்விழாக்களில் இரத உற்சவம் ஆன்மாக்களின் மல நிவாரணம் என்று சொல்லப்படுகின்ற ஆணவம் , கன்மம்,மாயையை ஒடுக்கி ஆன்மாவை இறைவனிடம் இணைத்து திருவருளைப் பெறுவதற்கு உரிய விழாவாக இடம்பெறுகின்றது. இவ்விழாவில் கலந்து கொள்கின்ற அனைத்து தில்லையம்பதி வாழ் மக்கள் அனைவரும் சுபீட்சமாகவும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமாகவும் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று இத் தருணத்தில் தில்லையம்பதி ஸ்ரீ சிவ்காம சுந்தரியின் திருவடிகளை போற்றித் துதித்து நல்லாசி கூறி அமைகின்றோம்.

*யோக சுகினோ பவந்து*

*சிவ்காம கலாநிதி சிவசிறி இ.சுந்தேரஸ்வரக் குருக்கள் (பிரதம குரு தில்லையம்பதி)*

"அன்று சிவபூமி என்று திருமூலர் அழைத்த மணி நாடாம் இலங்கை மண்ணின் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களுள் ஒன்றாக விளங்கும் இத்திருக்கோயிலும் ஒன்றாகும்.

ஆரம்பத்தில் பேச்சி அம்மன் என்னும் திருநாமத்துடன் அன்னை சிவாகமி 1850 ஆம் ஆண்டுகளுக்கு முன் சூளைகள் சூழ மாமர நிழலில் முன்னைய பெரியார்களால் பாராமரிக்கப்பட்டு வந்தாலும் "வேலன்" என்னும் பெரியவராலேயே அம்பிகையின் ஆலயம் தோற்றம் பெற்றது எனலாம்.

1855ஆம் ஆண்டு தொடக்கம் ஆசாரசீலரான வேலன் என்பவர் அன்னையின் ஆலயத்திற்கு விளக்கு வைத்து வழிபடத் தொடங்கினார். இது ஆலய வழிபாட்டின் மறுமலர்ச் சிக் காலம் எனலாம். அத்துடன் கருங்கல்லினாலான அம் பிகையின் திருவுருவ விக்கிரகம் கோயிலில் வைக்கப்பட்டது. 1910ஆம் ஆண்டு காலப் பகுதியில் இவ் ஆலயம் 4 பக்கமும் சுண்ணாம்புக் கற்களால் கட்டப்பட்டு கூரை யோட்டினால் வேயப் பட்டு 15 அடி விஸ்தீரணம் கொண்ட ஆல யமாக உருப்பெற்றது.


''பஞ்சமணியும் சேமக்கலமும், சந்தணக்கிண்ணம் மற்றும் பூசை மணியும் இன்றுவரை பேணிப் பாதுகாத்து வருவதல் குறிப் பிடத்தக்கதாகும்''

சைவ ஆசாரத்தைப்பேணும் சைவப் பெரியார் சபாபதி மார்க்கண்டேயர் அவர்கள் பூசைக்காக நியமிக்கப்பட்டார். இக் காலத்திலேயே தான் வைகாசி விசாகப்பட்சத்தில் ஆடு, கோழி போன்ற உயிர்பலியிடுதலும் மடை போடுதலும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தொடர்ந்து 1958 வரை இவரது தொண்டு சென்றது. 1959 ஆம் ஆண்டு ஆரம்பப்பகுதி யில் முத்தன் ராசன், பொன்னன் சுந்தரலிங்கம் இவ்வூரைச் சேர்ந்த வீரகத்தி தம்பி ஐயா ஆகியோரின் பெரும் மனதினால் தர்ம பரிபாலனசபை உருவாக்கப்பட்டு இச் சபையினால் இவ் ஆலயம் பொறுப்பேற்கப்பட்டு இரண்டு காலப் பூசை அதாவது காலை, மாலை பூசை வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நித்திய பூசகராக அன்று முதல் வீ.தம்பி ஐயா நியமிக்கப்பட்டார். இவர்களது முயற்சியால் ஆலயத்தில் நடைபெற்று வந்த வைகாசி விசாகப்பொங்கலில் இடம்பெற்ற பலியிடுதல், மடை போடு தல் போன்ற முறைமைகள் மாற்றப்பட்டு ஆலயத்தின் புறச் சூழலில் அமைந்திருந்த சூளை மேடுகள் அகற்றப்பட்டு ஆலயத்திற்கு என விஸ்தீர ணம் கொண்ட இடம் ஒதுக்கப்பட்டது.

1962 ஆம் ஆண்டு அன்னையின் அருட்கடாட்சத்தினால் ஒன்று கூடிய மக்கள் ஆலயத்தைச் சிறப்பான திருப் பெரும் கோயிலாக அமைப்பதற்கு பாலஸ்தாபனம் செய்தனர். 1965ஆம் ஆண்டு முன்னாள் யாழ். மாவட்ட நீதிபதி சோ.தன பாலசிங்கம் அவர்களும் யாழ். பொலிஸ் சுப்பிறிண்டர் திரு.வான் சண்டன் அவர்களும் வட மாகாண அரசாங்க அதிபர் திரு. ஐவன் சமரவிக்கிரம அவர்களும் அத்திவாரக்கல் நாட்டு விழாவை முன்னின்று செய்தனர்.

1965 ஆம் ஆண்டு ஆனி மாதம் 17ஆம் திகதி வியாழக் கிழமை உத்தரட்டாதி நடத்திரத்தில் சுப முகூர்த்த நன்நாளில்





பிரம்மஸ்ரீ குமாரசாமி குருக்கள் அவர்களால் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற்று அன்றிலிருந்து *சிவகாமி அம்பாள்* எனும் திரு நாமம் சூட்டப் பட்டது.

1966ஆம் ஆண்டு வைகாசி விசாகத்தை முன்னிட்டு 10 தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெற திருவருள் பாலித்தது. 09.07.1971ஆம் ஆண்டு தேர்த்திருப்பணி அங்குராப் பண நிகழ்வு நடைபெற்றது. தொடர்ந்து ரிஷபம், பலிபீடம், கொடித் தம்பம், வசந்த மண்டபம், மணிக்கோபுரம், திருமஞ்சனக் கிணறு முதலான திருப் பணி வேலைகள் நிறை வேற்றப்பட்டு 1976ஆம் ஆண்டு தேர் வெள் ளோட்டமும் இடம்பெற்றது. 1977 ஆம் ஆண்டு அம்பாள் திரு வூஞ்சல் காப்பு சூட்டிபுரத்தில் இசை மணி சீர்காழி கோவிந்தராஜன் அவர்களால் பாடப்பட்ட சிறப்பும் உடையது.

திருக்கோயில் வாயிலில் மகா விருட்ஷமாகக் காணப்படும் ஆலும் அரசும் ஒன்றிணைந்த அருள்மிகு பொந்தினூடாக அம்பா ளின் விமானத்தின் கலசத்தினைக் காணக்கூடியதாகவுள்ளது. இது அற்புதமான ஒன்றா கும்.

மீண்டும் 1982 இல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு உலக இந்து மகா சபை இலங்கை இணைப் பிரதித் தரைவராக இருந்த அரச அதிபர் திரு.யோகேந்திரா துரைசாமி அவர்களால் தைப்பூச தினத் திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணி வேலைகள் தொடங்கப்பட்டன.

1990 இல் திருக்கோயில் வருடாந்த சங்காபிஷேக தினத்தன்று காசி யில் இருந்து காசி விஸ்வநாதர் இங்கு வரழைக்கப்பட்டது. 1994ஆம் ஆண்டு நடைபெற்ற பங்குனி உத்தர சங்காபிஷேகத் தின் போது அம்பாளின் கடாட்சத்தினாலும் அடியார்களின் பெரும் காணிக் கையினாலும் அம்பாளுக்குப் பொன் முடியும், திருக்கோர ணம் சூட்டும் விழாவும் கொண்டா டப்பட்டது.

கவிமாமணி ந.வீரமணிஐயர் அவர்களால் ஆக்கப்பெற்று தென்னிந்திய பக்திப் பாடகர் கலைமாமணி ரி.எம்.சௌந்தரரா ஜன் அவர்களால் பாடப் பட்ட திருவூஞ்சல் ஒலிப்பதிவு நாடா வெளி யீட்டு விழா 1994 இல் இடம் பெற்ற பங்குனி உத்தர தினத்தன்று ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகள் ஆசியுடன் வெளி யிடப்பட்டது. அத்தோடு 1997ஆம் ஆண்டு இரண்டாவது பக்திப்பாமாலை ஒலிப்பதிவு நாடாவும் வெளியீடு செய்யப்பட்டது.

இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட ஸ்ரீ சக்கரம் 1998இல் இடம்பெற்ற பங்குனி உத்தர தினத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டது. 2000 ஆம் ஆண்டு 25ஆவது கொடியேற்றத்தை முன்னிட்டு அடியார்களின் பெரும் காணிக்கையினால் அம்பாளுக்கு தங்கக் குடை சூட்டுவிழாவும், இராஜ கோபுரம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவம் நடை பெற்றன.

இதைத் தொடர்ந்து 2002ஆம் ஆண்டு மஹோற்சவ காலப் பகுதியில் பிரம்ம ஸ்ரீ ந.வீரமணி ஐயர் அவர்களால் இயற்றப்பட்ட தில்லையம்பதி யாள் கீர்த்தனைகள் தென்னிந்தியக் கலைஞர்களான கலைமாமணி டாக் டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் மற்றும் ரி.எம்.எஸ். செல்வக்குமார் ஆகியோர் பாடி வெளியிடப் பட்டது.

2003ஆம் ஆண்டு மஹோற்சவப் பெருநாள் நிறைவுற்ற கையோடு பாலஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டு நவக்கிரகமும் புதிதாக அமைக்கப்பட்டு அம்பாளுக்கு செங்களனித் தடாகமும் அமைக் கப்பட்டது. அத்துடன் வசந்த மண்டபத் தெற்கு வாசல் திறக்கப்பட்டது.

*ராகம் : காமாஸ்* *தாளம் :ஆதி*

ஊர் கூடி வடம்பிடித்தே உளம் உருகச் –சித்திரத்
தேர் ஏறி வலம் வந்தாள் தேவி சிவகாமி (ஊர் கூடி)

*அனுபல்லவி*

வாரகி வைஷ்ணவி வளம் திகழ் கோண்டாவில்
சீர்மேவு தில்லைப்பதி சிவகாமசுந்தரி (ஊர்கூடி)

*சரணம்*

தேரின் திருத்தொங்கல் வாகுமாலை சூட.
நாதஸ்வர கானம் நாதத் தவில் ஒலிக்க
பேரின்ப பக்தர் வழிபெருகிக் கண்ணீர் சொரிய
ஊரின்புறக் கோண்டாவில் உல்லாசி பவனி வந்தாள்
(ஊர் கூடி)

புன்னகை புரிந்தாருள் பொலிவுறத் தந்தனள்
அன்னவள் வரதமும் அபயமும் காட்டினாள்
என்னகுறை எமக்கு எங்கள் தாய் இருக்கும் போது
இன்னமுத்தத் தாயன்பால் என்றும் எமைக் காத்திடுவாள்
(ஊர் கூடி)

ஆக்கம்:அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர்
பாடியவர்:கலைமாமணி ரி.எம்.சௌந்தரராஜன்

இந்தியாவின் கும்பகோணத்தில் இருந்து தருவிக்கப்பட்ட நடராஜப் பொருமன் , மாணிக்கவாசகர் , நவக்கிரகமூர்த்திகள் என்பன பிரதிஸ்டை செய்யப்பட்டதுடன் தமிழகதத்தின் கும்பகோண *நவகன்னிகை* எனப்போற்றப் படும் மஹாமா சிமா தீர்த்தங்கள் கொண்டு 2004 ஆம் ஆண்டு சுபானு வரு டம் பங்குனி உத்தர தினத்தன்று சிவஸ்ரீ சதா மகாலிங்க குருக் கள் தலைமையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அத்தோடு அருட்கவி செம்மல் பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர், இரா. இராஜேஸ்வரன் ஆகியோரால் இயற்றப்பட்டு தென்னிந்தியப் பாடகர்களான ரி. எம்.எஸ்.செல்வக்குமார், கலைமாமணி டாக்டர் சீர்காழி ஜி.சிவசிதம்பரம் ஆகியோரால் பாடப் பெற்ற தில்லையம்பதியாள் கும்பாபிஷேக கீர்தனைகள் பாகம்-4 வெளியீடு செய்யப்பட்டது.

கும்பாபிஷேகம் நிறைவுற்றதும் அந்த வழிபாட்டை, நிகழ்வுகளை ஆவ ணப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் பரிபாலன சபையினரால் பயனுள்ள பல தகவல்கள் திரட்டப் பட்டு கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களால் தொகுக்கப்பட்ட *அம்மன் களஞ்சியம்* எனும் கும்பாபி ஷேக மலர் உருவானது.

இவ்வேளையில் அம்பாளினுடைய ஆலயத்தையும் இவ் வூர் மக்களையும் நேரில் பார்த்துவிடவேண்டுமென விரும் பிய தென்னிந்திய பக்திப்பாடகர் ரி.எம். சௌந்தரராஜனின் புதல்வர் ரி.எம். எஸ். செல்வ க்குமார் அவர்கள் அன்னை யினுடைய ஆலயத்திற்கு அழைத்து வரப்பட்டார். அம்பாளின் அருளினால் தீர்த்த உற்சவ தினத்தன்று *02.06.2009 அம்மன் களஞ்சியம்* எனும் கும்பாபி ஷேக சிறப்புமலரி னையும் அவர் வெளியீடு செய்து வைத்தார்.

அன்னையின் அளப்பரிய அருளினால் நவகோண வடி வில் ஐந்து தளங்களை உள்ளடக்கிய இராஜகோபுரத்திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பூர்த்தியாகும் நிலையில் உள் ளன. தென்னிந் திய சிற்பவல்லு நர்களின் கைவண்ணத்தில் உருவாகி உயர்ந்து நிற்கும் அன்னையின் இராஜகோபுரத்தின் புனருத்தாரண மஹாகும் பாபிஷேக வைபவம் மிக விரைவில் இடம்பெற அன்னையின் திரு வருளை நாடி வேண்டி நிற்கிறோம்.

## பரிபாலன சபை ஆசி

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி அகிலத்தைக் காத்திடும் தில்லையம்பதி தேவி சிவகாமசுந்தரி இரதத்தில் ஆரோகணித்து வலம் வந்து சகல மக்களுக்கும் நாட்டின் சாந்தி ,சமாதானம் கிடைத்து நல்வாழ்வு அளிப்பாயாக ! பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்
**சி.ஆனந்தராஜா,**
திருக்கோயில் பரிபாலனசபை,
மத்திய கிராம முன்னேற்ற சங்கம்,
மத்திய சனசமூக நிலையம்.


## தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துவோர்

**ரூபன் வீடியோ & போட்டோ**
மங்கல வைபவங்கள் சிறந்த முறையில் படம் பிடித்துக் கொடுக்கப்படும்
குமரகோட்டம், கோண்டாவில். ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

**உதயன் போட்டோ**
வெளிப்புற படப்பிடிப்பாளர்
தில்லையம்பதி , கோண்டாவில்.

**நியூ ஸ்ரார் தையலகம்**
வாகீஸ்வரி வீதி, கோண்டாவில்.

**அம்பிகை கொமினிக்கேசன் & ஒடியோ வீடியோ றெக்கோடிங் & பான்சி**
குமரகோட்டம் , கோண்டாவில்

**புலவர் வீடியோ**
தில்லையம்பதி , கோண்டாவில்.

**பாலா வீடியோ**
தில்லையம்பதி , கோண்டாவில்.

**அண்ணா கோப்பி**
இணுவில்.

**செந்தூரன் அலங்காரப் பந்தல்**
அரசடி வீதி , கோண்டாவில் கிழக்கு.

போட்டோ டிசைனிங் , டிஜிற்றல் அல்பம் என்பன செய்து பெற்றுக்கொள்ள
**மலர்கள் கிறபிக்ஸ்**
வீரபத்திரர் வீதி, கோண்டாவில் வடக்கு.
**சிவகாமி எலற்றொனிக்**
பலாலி வீதி ,திருநெல்வேலி.

**செல்வா எலக்ரிக்கல்ஸ்**
43/1,பலாலி வீதி , திருநெல்வேலி.

**வேதா கொமினிக்கேசன்**
தில்லையம்பதி , கோண்டாவில்.

**வினோ பந்தல் சேவை & டிஜிற்றல் வீடியோ படப்பிடிப்பு**
தொடர்பிற்கு–
அன்னங்கை , உரும்பிராய் மேற்கு, கோண்டாவில்.

# குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்துள்ள யாழ்ப்பாணப் பாடசாலைக் கூடைப்பந்தாட்டம்

யாழ். மாவட்டத்தில் கூடைப்பந்தாட்ட வளர்ச்சியில் யாழ்ப்பாணக் கல்லூரி பாரிய பங்கினை செய்து வருகின்றது என்ற நோக்கில் 01.08.2008 அன்று இதே பத்திரிகையில் இதே தலைப்பில் ஒரு சிறிய கட்டுரை வரையப்பட்டது. 10 மாதங்களுக்கு பின்னர் அக்கட்டுரையின் ஊடாக முன்வைக்கப்பட்ட யாழ். மாவட்டத்தின் கூடைப்பந்தாட்ட நிலையினை இன்று இக்கட்டுரையின் ஊடாக மீண்டும் ஒரு தடவை மதிப்பிட்டுப் பார்க்கலாம்.

யாழ். மாவட்டத்திலே கூடைப்பந்தாட்டங்கள் சில ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சில பாடசாலைகளிலேயே விளையாடப்பட்டு வந்தது. கடந்த சில வருடங்களாக பல பாடசாலைகளில் கூடைப்பந்தாட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் யாழ். மாவட்ட பாடசாலை களுக்கு இடையிலான கூடைப்பந்தாட்டத்தை தேசிய பாடசாலைகள் ரீதியாக தரம் உயர்த்த வேண்டும் என்ற தூர நோக்குடன் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபரும் யாழ். மாவட்ட பாடசாலைக் கூடைப்பந்தாட்ட சங்கத்தின் தலைவருமாகிய திரு என்.ஏ. விமலேந்திரன் அவர்களினால் 1947ஆம் ஆண்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கு வந்து யாழ்ப்பாணக் கல்லூரியில் கூடைப்பந்தாட்டத்தினை சிறந்த முறையில் பயிற்றுவித்து, யாழ். மாவட்டத்தில் சிறந்ததொரு கூடைப்பந்தாட்ட அணியினை உருவாக்கிய கூடைப் பந்தாட்டத்தின் தந்தை என அழைக்கப்படும் Dr.W.R.HOLMES அவர்களுடைய ஞாபகார்த்தமாக 2007ஆம் ஆண்டு யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது.


யாழ். மாவட்டத்திலே கூடைப்பந்தாட்டம்

> **யாழ்.மாவட்டத்தில் கூடைப்பந்தாட்ட ஆடுகளம் ஒன்று இல்லாதது பெரும் குறையாக உள்ளது. இதனை அமைத்துக் கொடுப்பதற்கு யாழ்ப்பாணத்திலுள்ள தலைவர்கள் உதவி புரிய வேண்டும்.**

வளர்ச்சியடையாத காலகட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவில் சரித்திர பேராசிரியராக இருந்த Dr.W.R.HOLMES அவர்கள் கல்விக்கு மாத்திரமல்ல விளையாட்டுத்துறைக்கும் குறிப்பாகக் கூடைப்பந்தாட்டத்திற்கு தனது அர்ப்பணிப்பான பணியினை ஆக்க பூர்வமாக மேற்கொண்டதால் இன்று யாழ். மாவட்டத்தின் கூடைப்பந் தாட்டம் அவரின் தூர நோக்கை அடைந்து வருகின்றது எனலாம்.

இவருடைய ஞாபகார்த்தமாக 2007ஆம் ஆண்டு கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியை ஆரம்பித்த போது ஆண்கள் அணிகளை கொண்ட சில பாடசாலைகளே இச்சுற்றுப் போட்டியில் கலந்து கொண்டன. 2008ஆம் ஆண்டு இச் சுற்றுப்போட்டியை நடத்திய போது முதல் தடவையாக பெண்கள் அணிகளைக் கொண்ட பாடசாலை அணிகள் பங்குபற்றின.

மூன்றாவது வருடமாக நடைபெறும் இச் சுற்றுப் போட்டியில் ஆண்கள் அணியில் பரியோவான்கல்லூரி,யாழ்ப்பாணக்கல்லூரி,கொக்குவில் இந்துக் கல்லூரி,பத்திரிசியார் கல்லூரி,யாழ்.மத்திய கல்லூரி,சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய ஆண்கள் அணிகளும் திருக்குடும்பம் கன்னியர் மடம்,உடுவில் மகளிர் கல்லூரி, வேம்படி உயர்தர மகளிர் பாடசாலை,யாழ்ப்பாணக்கல்லூரி,பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரி ஆகிய பெண்கள் அணிகளும் சிறப்பாக பங்குபற்றுகின்றன.



அன்ரன் சந்திரன் பிரான்சிஸ்
கனிஷ்ட இணை உப அதிபரும் கூடைப்பந்தாட்ட பயிற்றுனரும்;
யாழ்ப்பாணக் கல்லூரி வட்டுக்கோட்டை

(தொடரும்)

## பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் இறுதிப் போட்டியில் சபினா




(பாரிஸ்)

பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடரின் பெண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டிக்கு உலகின் நம்பர்-1 வீராங்கனையான டினரா சபினா முன்னேறினார்.

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் உலகின் முன்னணி வீரர் வீராங்கனைகள் பங்கேற்கும் கிராண்ட்ஸ்லாம் டென்னிஸ் தொடரான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் தொடர் நடக்கிறது.

இதில் நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் அரையிறுதியில் ரஷ்யாவின் சபினா,சுலோவேகியாவின் டொமனிகா சிபுல் கோவாவை சந்தித்தார்.

முதல் செட்டை 6:3 என எளிதாக கைப்பற்றினார். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரஷ்ய வீராங்கனை இரண்டாவது செட்டை 6:3 என தன்வசப்படுத்தினார்.

இறுதியில் டினரா சபினா 6:3,6:3 என்ற நேர் செட்டில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இதன் மூலம் சபினா தொடர்ந்து இரண்டாவது முறையாக (2008, 2009) இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

ஆண்கள் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் பயஸ், செக் குடியரசின் லூகாஸ் லூயி ஜோடி, செர்பியாவின் ஜிமோன்ஜிக், கனடாவின் டேனியல் நெஸ்டர் ஜோடியை 7:6,7:6 என்ற நேர் செட்டில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இறுதிப் போட்டியில் பயஸ் ஜோடி, தென்னாபிரிக்காவின் வெஸ்லே மோடி, பெல்ஜியத்தின் டிக் நார்மன் ஜோடியை சந்திக்கிறது.

## 19 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் தொடர்

## கோபிகன்,ஹரிவதனன் அசத்தல்; யாழ்.மாவட்ட அணி திரில் வெற்றி

(வவுனியா)

கோபிகன்,ஹரிவதனனின் அசத்தலான பந்துவீச்சின் மூலம் 19 வயதிற்குட்பட்ட யாழ். மாவட்ட கிரிக்கெட் அணி 2 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் திருகோணமலை மாவட்ட அணியை வீழ்த்தியது.

சிறிலங்கா கிரிக்கெட்டின் அனுசரணையுடன் வடக்கு,கிழக்கு மாகாணத்திலுள்ள 5 மாவட்டங்களின் 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 50 ஓவர்களைக் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் போட்டி சுற்றுத் தொடர் வவுனியாவில் நடைபெறுகின்றது.

இதில் யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட அணிகள் மோதுகின்றன.

மன்னார் மாவட்ட அணி இறுதி நேரத்தில் பங்குபற்றுவதில் இருந்து விலகியது.

இத் தொடரில் நேற்று வவுனியா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்ட அணியும் திருகோணமலை மாவட்ட அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய திருகோணமலை மாவட்ட அணி கோபிகன், ஹரிவதனனின் சிறப்பான பந்துவீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் 25 ஓவர்களில் 83 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில்குமுதன், சுதர்சன் ஆகியோர் தலா 13 ஓட்டங்களையும் நுவான் 11 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

பந்து வீச்சில் கோபிகன் 7 ஓவர்கள் பந்துவீசி 25 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் ஹரிவதனன் 6 ஓவர்கள் பந்துவீசி. 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் சஜிந்திரன், மிலான்டோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 84 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய யாழ்.மாவட்ட அணி 17.4 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 86 ஓட்டங்களை எடுத்து போராடி வெற்றி பெற்றது.

இதில் அணித் தலைவர் ஹரிப் பிரவீன் 18 ஓட்டங்களையும் மிலாண்டோ ஜெனிபர் 16 ஓட்டங்களையும் அதிகபட்சமாக எடுத்தனர்.

பந்து வீச்சில் லக்ஷித,குமுதன் மற்றும் விதுரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டை வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் யாழ். மாவட்ட அணி தான் விளையாடிய 2 போட்டிகளிலும் வெற்றிபெற்ற நிலையில் நாளை மட்டக்களப்பு அணியை சந்திக்கின்றது.

இப் போட்டியுடன் யாழ்.மாவட்ட அணி நாளை மறுதினம் யாழ்ப்பாணம் திரும்புகின்றது.




ஐ.சி.சி. இரண்டாவது இருபது-20 உலகக் கிண்ணத் தொடர் நேற்று லண்டன் லோட்ஸ் மைதானத்தில் ஆரம்பமானது. இதில் முதலாவது லீக் போட்டியில் நேற்று இங்கிலாந்து-நெதர்லாந்து அணிகள் மோதின இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரைட் (71),பொப்ரா (46) ஜோடியின் அதிரடி ஆரம்பத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்களை எடுத்தது.

## அன்ரூ சைமண்ட்ஸ் நீக்கம்

(லண்டன்)

மீண்டும் சர்ச்சையில் சிக்கிய சைமண்ட்ஸ் இருபது-20 உலக கோப்பை தொடரிலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டார்.

அவுஸ்திரேலிய அணியின் சர்ச்சை நாயகன் சைமண்ட்ஸ் நீண்ட இழுபறிக்குப்பின் இருபது-20 உலகக் கோப்பை தொடருக்கான அவுஸ்திரே லிய அணியில் இடம் பிடித்தார்.

நேற்று ஆரம்பமாகிய இருபது-20 உலகக்கிண்ண தொடருக்கு முன்னதாக மீண்டும் சிக்கலில் மாட்டிக் கொண்டார். கடந்த புதன் கிழமை அணி வீரர்கள் சிலருடன் இணைந்து ரக்பி போட்டியை பார்க்க சென்ற இவர் மது அருந்தியுள்ளார்.

அதற்குபின் நேற்றுமுன்தினம் காலை அணி வீரர்களுக்கான பயிற்சியில் இவர்கலந்துகொள்ளவில்லை.

இதன் காரணமாக அணி நிர்வாகம் சைமண்ட்ஸை அதிரடி நீக்கம் செய்து உள்ளது. சைமண்ட்ஸின்




நடவடிக்கை குறித்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் போர்டின் நிர்வாக அதிகாரி ஜேம்ஸ் சதர்லேண்ட் கூறுகையில்;

கடந்த 24 முதல் 48 மணி நேரத்துக்குள் அணி விதிமுறைகளை பல முறை மீறியுள்ளார் சைமண்ட்ஸ். பெரிய அளவில் பிரச்சினை ஏற்படாவிட்டாலும் அவரது அணுகுமுறை விதி மீறிய செயல். இதனால் அவர் உடனடியாக நீக்கப்பட்டார். இவருக்குப்பதில் மாற்று வீரர் விரைவில் தேர்வு செய்யப்படுவார் என்றார்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்



# பிரதம நீதியரசரின் விமர்சனங்கள் அவரின் சொந்தக் கருத்து மட்டுமே

## அரசாங்கம் கூறுகிறது

(கொழும்பு)

இடம் பெயர்ந்துள்ள தமிழ் மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ள இடைத்தங்கல் முகாம்களின் நிலை குறித்து பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா முன் வைத்துள்ள விமர்சனங்கள், அது அவரது சொந்தக் கருத்து மட்டுமே என அரசாங்கம் கூறியுள்ளது.

வட இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இரண்டரை இலட்சம் பேருக்கும் அதிகமானோர் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களை முதல் தடவையாக பார்வையிட்டுவிட்டு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா கூறியிருந்த கருத்து, அவருடைய சொந்தக் கருத்து என்றும் அது அவருடைய பார்வை மட்டுமே என்றும் இலங்கை மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க பி.பி.சியிடம் தெரிவித்திருக்கிறார்.

பணியிலிருந்து விரைவில் ஓய்வுபெறவிருக்கும் அவர் கடந்த புதன்கிழமை ஆற்றிய உரையில் இடம் பெயர்ந்த மக்கள்படும் கஷ்டங்களையும் அனுபவித்த துயரங்களையும் வர்ணிக்க வார்த்தைகளே இல்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

அவர்கள் பரிதாபமான நிலையிலிருக்கிறார்கள். அவர்களுக்கு தன்னால் எதைச் சொல்லியும் ஆறுதல் கூற முடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

கழிப்பறைக்கு வெளியே நூற்றைம்பது முதல் முந்நூறு அடி தூரம் வரைக்கும் மக்கள் வரிசையில் காத்து நிற்பதையும் ஒவ்வொரு சிறிய கூடாரத்திலும் 10 பேர் வரையில் திணித்துக் கொண்டு தங்கியிருப்பதையும் தான் காண நேர்ந்ததாக நீதியரசர் சரத் சில்வா தெரிவித்திருந்தார்.

சட்டத்தில் எவ்வித பாதுகாப்பும் அற்றவர்களாக மக்கள் அங்கு இருக்கிறார்கள் என்று அவர் வேதனை வெளியிட்டிருந்தார்.

ஆனால் அந்த நிலை இனி இல்லை என்றும் முகாம்களில் தங்கியுள்ளோர் உள்ளிட்ட எவருக்குமே இனி இலவசமாக சட்ட உதவிகள் கிடைக்கும் என்றும் அமைச்சர் சமரசிங்க கூறினார்.

கழிப்பறைகள், கூடாரங்கள் தொடர்பான தலைமை நீதிபதியின் சில விமர்சனங்களை தான் ஏற்றுக் கொள்வதாக கூறிய அமைச்சர் சமர சிங்க அவ் வகையான வசதிகளை ஏற்படுத்தித் தருவதெல்லாம் ஐ.நா. குழந்தைகள் நல நிதியம், ஐ.நா அகதிகள் நல நிறுவனம் ஆகியவற்றின் பொறுப்பு என்று கூறியிருந்தார்.

ஆனால் அமைச்சரின் இந்தக் கூற்றை யுனிசெப் சார்பாக பேசவல்ல அதிகாரியான ஜேம்ஸ் எல்டர் மறுத்திருந்தார்.

முகாம்களின் நிலை தொடர்பில் அதிகபட்ச பொறுப்பு என்பது அரசாங்கத்திற்குத் தான் இருக்கிறது என்றும் ஐ.நா. வழங்கக் கூடிய உதவிகளும் கூட முகாம்களில் தொண்டு நிறுவனங்கள் செயற்படுவதில் அரசாங்கம் விதித்துள்ள கட்டுப்பாடுகள் காரணமாக முடங்கிப் போயிருக்கின்றன என்றும் ஜேம்ஸ் எல்டர் குறிப்பிட்டிருக்கிறார். (ச-3)

## கண்டெடுக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

மண்கும்பானைச் சேர்ந்த பஞ்சாட்சரம் கார்த்திகா (885823270V) என்பவரது தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலகத்திற்கு நேரில் வந்து அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள முடியும். (நு)

## உள்ளூராட்சித்...

வடக்கு உள்ளூராட்சி தேர்தல்களில் ஈ.பி.டி.பி.கட்சி தனித்துப் போட்டியிடுவதா அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதா என்பது குறித்து விரைவில் தீர்மானிக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கு மேலதிக அதிகாரங்களுடன் 13-வது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தி அரசியல் தீர்வு வழங்கப்படும் என ஜனாதிபதி உறுதியளித்ததாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

இதனையே தாம் நீண்டகாலம் வலியுறுத்தி வந்ததாகவும் தற்போது இத் தீர்வை பெரும்பாலானவர்கள் ஆதரிப்பதாகவும் அவர் கூறினார். (ச-5)

## நலன்புரி முகாம் மக்களில்...

இலங்கைக்கு ஏதிரான பிரேரணைகளை முன்வைத்தவர்களால் ஏற்கனவே ஒளிப்பதிவு செய்து கொண்டுவரப்பட்ட ஒளிநாடா மூலம் திரையில் பேசிய ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, முகாம்களில் தங்கியிருக்கும் சிறுவர்கள் உணவு மற்றும் போஷாக்கின்றி உயிரிழப்பதாக கூறியதாக இடர் முகாமைத்துவம் மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

முகாம்களில் தங்கியிருப்பவர்கள் இவ்வாறு உணவு இல்லாமல் உயிரிழந்தால் அதற்கான பொறுப்பை உலக உணவுத் திட்டமே ஏற்கவேண்டும் எனக் கூறிய மஹிந்த சமரசிங்க, ஏனெனில் அவர்களே உணவு விநியோகத்திற்கான பொறுப்பை ஏற்றிருக்கிறார்களெனவும் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்.

இது தவிர இலங்கை நிலைவரத்தைக் கூறி வேறு நாடுகளிடம் இருந்து அவர்கள் நிதியுதவியும் பெற்றுக்கொள்கிறார்கள் எனவும் எனினும் பணம் செலவிடுவதில்லை எனவும் அமைச்சர் குற்றஞ்சாட்டினார். எனினும் முகாம்களில் உணவுப் பற்றாக்குறை நிலவவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்

இதேவேளை இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகிறது என்பதை ஏற்றுக் கொண்ட மஹிந்த சமரசிங்க இது குறித்தும் ஐக்கிய நாடுகளையே குற்றஞ்சாட்டியுள்ளார். (ச-5)

## நவநீதம்பிள்ளையின்...

குறித்த முழுமையான விசாரணை தேவை என்று ஐ. நா. மன்றத்தின் மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் தலைவர் நவநீதம்பிள்ளை மீண்டும் வலியுறுத்தியிருக்கிறார்.

ஐ.நாவின் மனித உரிமைக் கவுன்சிலின் 11ஆவது அமர்வில் தொடக்கத்தில் பேசிய நவநீதம்பிள்ளை இதைத் தெரிவித்தார்.

மோதல்களால் இடம்பெயர்ந்துள்ள பெருமளவிலான மக்கள் வெளியேற முடியாத முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் இன்றைய சூழலில் அவர்களின் சுதந்திரமான நடமாட்டமும் அவர்களுக்கான மனிதாபிமான உதவிகள் கட்டுப்பாடுகள் எதுவுமில்லாமல் அனுமதிக்கப்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்களுக்கு அதைச் செய்த அனைத்து தரப்பினரையும் பொறுப்புக்குள்ளாக்கிய முழுமையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது அவசியம்.

அனைத்து இலங்கையர்கள் மத்தியிலும் நல்லிணக்கம் ஏற்படுத்துவதற்கும் அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கும் நடந்தவைகளுக்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிவது அடிப்படைத்தேவை என்று நான் கருதுகிறேன். நீடிக்கத்தக்க அமைதிக்கு அதுவே அடிப்படையாக இருக்க முடியும். இது தொடர்பில் ஐ.நா மன்றத்தின் மனித உரிமைகளுக்கான கவுன்ஸிலின் உதவியை அளிக்க நான் தயாராக இருக்கறேன் என நவநீதம்பிள்ளை கூறினார்.

ஆனால் இவரது இந்த யோசனையை ஐ.நா. மன்றத்துக்கான இலங்கை அரசின் தூதர் தயான் ஜெயதிலக கடுமையாக மறுத்தார்.

இலங்கை இராணுவம் என்பது அரசியல் சட்ட அடிப்படையிலான ஜனநாயக அரசாங்கத்துக்கு கட்டுப்பட்டு நடப்பது. பேச்சுவார்த்தைகள் மூலம் அரசாங்கம் பலமுறை பேசித் தீர்க்க முயன்று முடியாமல் போன பிரிவினை கோருகின்ற பயங்கரவாத ஆயுததாரிகளுக்கு எதிராக அங்கீகரிக்கபட்ட தனது நாட்டின் எல்லைக்குள்ளேயே இலங்கை இராணுவம் சண்டையிட்டது.

எனவே எங்கள் நிலைமைக்கு எந்த விதத்திலும் பொருந்தாத வேற்று நாட்டு உதாரணங்களை எங்கள் மீது திணிப்பதற்கு நாங்கள் ஒரு போதும் அனுமதிக்கமாட்டோம் என்றார்.

இதேவேளை இலங்கையில் சர்வதேச விசாரணைகள் தேவை என்கிற நவநீதம்பிள்ளையின் கோரிக்கையை ஆதரிப்பதாகத் தெரிவித்தார் ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில் பேசிய செக் குடியரசின் ஐ.நா. மன்றப் பிரதிநிதி தோமஸ் கூசாக். ஆனால் இந்தியாவின் சார்பில் பேசிய கோபிநாதன், நவநீதம்பிள்ளையின் யோசனைக்கு எதிர்ப்பு தெரிவித்தார். (ச-3)

## பசில் எம்.பி. ...

வடக்கின் வசந்தம் அபிவிருத்தித் திட்டத்தினை யாழ்.மாவட்டத்தில் பசில் ராஜபக்ஷ ஆரம்பித்து வைக்கவுள்ளார் என கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (ச-5)

## தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள்

# யாழில் நலன்புரி முகாம்களிலுள்ள பாடசாலைகளுக்கு செல்லவேண்டும்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்காலிக இணைப்பிலுள்ள வன்னிப் பகுதியைச் சேர்ந்த ஆசிரியர்கள் நலன்புரி முகாம்களிலுள்ள பாடசாலைகளுக்கு கடமைக்கு செல்ல வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது:

அவ்வாறு செல்லாதவர்கள் தமது பதவியிலிருந்து தாமாகவே விலகியவர்களாக அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் தற்காலிக இணைப்பிலுள்ள ஆசிரியர்கள் தமது பிரதேச மாணவர்கள் கல்வி கற்கும் நலன்புரி முகாம்களிலுள்ள பாடசாலைகளில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட பின்னடிப்பதனாலேயே இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாக கூறப்பட்டது. (ச-5)

## வங்கக்...

உருவான காற்றழுத்தத் தாழ்வு நிலை புயலாக மாறி மேற்கு வங்கத்தை தாக்கியது. இதனால் அங்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

இந்நிலையில் மீண்டும் வங்கக் கடலின் வடமேற்குப் பகுதியில் ஒரிசாவுக்கும் மேற்கு வங்கக் கடற்கரைக்கும் இடையே காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது.

இப் புயல் இலங்கையின் வடக்கு கரையோரப் பகுதிகளைத் தாக்கக் கூடும் என சென்னை வானிலை அவதான நிலையம் கூறியுள்ளது. இதேவேளை யாழ்ப்பாணத்தில் நேற்றுத் தொடக்கம் கடும் காற்று வீசி வருகின்றது. (ச-5)

## ஜனாதிபதி...

பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரைக்கே சிராந்தி ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் நாமல் ராஜபக்ஷ ஆகி யோர் விஜயம் செய்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

உச்ச பாதுகாப்பின் மத்தியில் இந்தப் பயணம் நேற்றுக் காலை இடம்பெற்றிருந்தது. எனினும் குடாநாட்டின் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே எங்கும் அவர்கள் சென்றிருக்கவில்லை.

அந்தப் பகுதிக்கு கடற்படையினரால் பலத்த சோதனைகளின் பின்னர் அழைத்துச் செல்லப்பட்ட பொதுமக்களுக்கு உதவிப் பொருட்களையும் இவர்கள் வழங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் மதியத்துடன் இவர்கள் கொழும்பு திரும்பி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-5)


# வேலை வாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்கும் துடிப்பான இளைஞர் யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ்.மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றி வரும் காப்புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரிய வாய்ப்பு.

**வேலை பற்றி**

☆ 3மாத பயிற்சிக் காலத்தை உடையது.
☆ இக்காலப் பகுதியில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.
☆ பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாக்கும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
☆ பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

**அடிப்படைத் தகைமை**

☆ G.C.E. O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாட சித்தி
☆ 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (Bio Data) 15.06.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

**விளம்பர இல. 2792**
**C/O, வலம்புரி**
**இல.03,02ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

2792-8


## வன்னி இறுதிக்கட்ட மோத...

இலங்கையில் நடந்த மோதல்களில் 20 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக முன்வைக்கப்பட்ட தகவல்களை நிராகரித்த அவர் 7 ஆயிரம் பேர் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையையும் நிராகரித்தார்.

3 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரையான பொதுமக்களே கொல்லப்பட்டுள்ளார்கள் என நாம் கணக்கெடுத்துள்ளோம் என அவர் கூறினார்.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை மனிதக் கேடயங்களாக பயன்படுத்தியிருந்தனர். இதனாலேயே பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் அதிகமாகின.

அதேநேரம் இலங்கையில் பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்ட எண்ணிக்கைகள் உத்தியோகபூர்வமற்றவை. அந்த எண்ணிக்கைகள் சரியாக உறுதிப்படுத்தப்படவில்லை எனவும் ரஜீவ விஜயசிங்க கூறினார்.

இராணுவத்தினர் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தவில்லை என குறிப்பிட்ட மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர், பொதுமக்களை விடுவிக்கும் நிலையிலேயே தாம் இருப்பதாக இராணுவத்தினர் முன்னர் தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பாதுகாப்பு வலயத்திலிருந்து பொதுமக்களுக்கு ஏற்படும் இழப்புக்கள் தொடர்பான எண்ணிக்கையை அதிகரித்துக் கூறிய வைத்தியர்கள் இருவர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக அவர் கூறினார். கடுமையான நெருக்கடியாலேயே அவர்கள் பொதுமக்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கூறியுள்ளனர். விசாரணைகள் முடிபடைந்ததும் அந்த வைத்தியர்கள் இருவரும்விடுவிக்கப்படுவார் கள் என்றார் பேராசிரியர் ரஜீவ விஜயசிங்க. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.06.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.